வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்
Wentworthville Tamil Study Centre Inc.

# கலை விழா மலர் 2025

## தமிழ் எம் அடையாளம்



## "தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்"

வென்றவேத்வில் தமிழ்க் கல்வி நிலையத்தின் இவ்வாண்டிற்கான கருப்பொருள் ‘தமிழ் எம் அடையாளம்’. ஏராளமான கலை, இலக்கிய, இலக்கணப் படைப்புகளையும், தொன்மையையும் தன்னகத்தே கொண்ட எமது அடையாளமாகிய தமிழ் மொழியினை அவுஸ்திரேலிய மண்ணில் அழியாமல் பாதுகாக்கும் பெரும் தமிழ்ப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் அனைவருக்கும் இனிய வணக்கங்கள்! வந்தனங்கள் !

‘தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவர்க்கொரு குணமுண்டு;
அமிழ்தம் அவனுடைய மொழியாகும், அன்பே அவனுடைய வழியாகும்.’

இந்த வரிகளுக்கேற்ப அமிழ்தினும் இனிய தமிழ் மொழியை, ஆம் மொழிகளுக்கெலாம் தாய்மொழியாக கருதப்படும் தமிழினை, தமிழர் அல்லாத பிற இனத்தவர்களும் கற்கும் போதுதான் அவுஸ்திரேலிய மண்ணில் தலைமுறைகள் பல கடந்தும் தமிழ் வாழும். எப்படி மற்ற இனத்தவர்கள் ஜப்பானிய, சீன, பிரஞ்சு மொழிகளை கற்கிறார்களோ அதேபோன்று தமிழர் அல்லாதவர்களும் தமிழினை கற்கும் நிலை அவுஸ்திரேலியா போன்ற ஆங்கில நாட்டில் வரவேண்டும். இது எமது அடையாளமான தமிழ்மொழியும், தமிழர் பண்பாடும் ஆங்கில நீரோட்டத்துடன் கலந்து நீர்த்துப் போகாமல் நீடித்து நிலைக்கக் கூடிய பலத்தினைத் தருவதோடு , பன்மொழிப் புலமை கொண்ட இளைய சமூகம் இந்நாட்டில் பல துறைகளிலும் வளர்ந்து தமிழின் பாதுகாவலர்களாக திகழவேண்டும்.

மூன்று தசாப்தங்களைத் தாண்டி இன்று 37ஆவது ஆண்டின் கலைவிழாவினை வென்றவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம் பெருமையுடன் கொண்டாடி மகிழ்கிறது. கலைவிழாவினை நினைவுகூரும் வகையில், ஆண்டுதோறும் கலைவிழா மலர் வெளியிடப்படுகிறது. இக் கலைவிழா மலரினை மாணவர் சித்திரங்கள், ஆக்கங்கள், ஆசிரியர் பார்வை, நிர்வாகக்குழுவினரின் செய்திகள், மாணவர், ஆசிரியர், நிர்வாகக்குழுவினர் புகைப்படங்கள் மற்றும் பாடசாலையின் வளர்ச்சிக்கு பலவழிகளிலும் பங்களிக்கும் வணிக நிறுவனங்களின் விளம்பரங்கள் அலங்கரிக்கின்றன.

தமிழினை தரணியில் நிலை நிறுத்த
தயங்காது பேசுவோம் தமிழ்
பேசும் மொழி வாழும்
பேசாத மொழி சாகும்
தமிழ் வாழ நாம் வாழ்வோம்
நாம் வாழ தமிழ் வாழும்.
வாழ்க தமிழ்!!
‘சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்’

நன்றி
நிர்வாகக்குழு 2025



Wentworthville Tamil Study Centre continuously promotes learning of Tamil language and culture with the focus of preparing students for their significant responsibilities within our Tamil community. The school's functioning and development is dependent on the amazing work of teachers, committee members, and parents who kindly donate substantial amounts of their time to further our students' education. This year marks the 37th anniversary since the founding of the Wentworthville Tamil Study Centre.

We publish an annual school magazine called Kalai Vizha Malar as part of our Kalai Vizha (annual art festival). This magazine serves as a means of showcasing and commemorating the several events we have taken part in during the year. Class photos, student artwork, photos of teachers and committee members, and messages from these members are also included.

We honour and are deeply grateful to the many individuals who have sacrificed and worked tirelessly behind the scenes to make this Kalai Vizha a memorable celebration of culture for us all. Their contribution to the continuation of the annual Kalai Vizha helps to ensure that the legacy of Kalai Vizha will be sustained now and in the future. The committed teamwork of all of our hard-working volunteers over the last 37 years and those who will continue this effort into the future, give us confidence that our Tamil language and culture will be sustained and thrive for our future generations.

We farewell our year 12 students and wish them all the very best for the remainder of their Tamil studies here at WTSC and for all the great endeavours that they will pursue in the future. Our Tamil youth community has the substantial responsibility of preserving Tamil language and culture for future generations. We urge them to continue using Tamil in their daily conversations, to contribute back to our Tamil community and to promote Tamil language and culture throughout Australia and around the world.

With gratitude,
Executive Committee 2025



# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே

ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே

– பாரதியார்

# பாடசாலைக் கீதம்

வாழ்க வென்றவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்
வாழிய வாழியவே
வாழ்க தமிழ் அன்னை ஆழிசூழ் உலகெல்லாம்
வாழிய வாழியவே (வாழ்க)

செம்மை முறை வழி செந்தமிழ்ப் பள்ளியை
சேர்ந்து வளர்த்திடுவோம்
எம்மையும் ஆதரித் தின்தமிழ் பயிற்றிடும்
ஈடில்லா நிலையமிதே (வாழ்க)

ஈரமும் மானமும் வீரமும் போற்றுவம்
இறைவனைத் தினந்துதிப்போம்
ஈகையில் வாய்மையில் அடக்கம் உயர் பணிபில்
என்றுமே உயர்ந்திடுவோம் (வாழ்க)

அன்பைப் பொழிந்தென்றும் ஒற்றுமை பேணியே
அருங்கலை கற்றிடுவோம்
இன்பத் தமிழ்ப் பள்ளி இனிது துலங்கிட எம்மையே
அர்ப்பணிப்போம் (வாழ்க)

சங்கத் தமிழ் என்றும் மங்காப் புகழுடன்
தரணியில் ஓங்கிடவே
எங்கும் தமிழ்மொழி எதிலும் தமிழ் மணம்
எழிலுடன் வாழியவே (வாழ்க)

– பல்வைத்தியர் பாரதி இளமுருகனார்




# AUSTRALIAN NATIONAL ANTHEM

Australians all let us rejoice,
For we are one and free;
We've golden soil and wealth for toil;
Our home is girt by sea;
Our land abounds in nature's gifts
Of beauty rich and rare;
In history's page, let every stage
Advance Australia Fair.
In joyful strains then let us sing,
Advance Australia Fair.

Beneath our radiant Southern Cross
We'll toil with hearts and hands;
To make this Commonwealth of ours
Renowned of all the lands;
For those who've come across the seas
We've boundless plains to share;
With courage let us all combine
To Advance Australia Fair.
In joyful strains then let us sing,
Advance Australia Fair.

# தலைவரின் செய்தி



கனியிடை ஏறிய சுளையும் – முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனி மலர் ஏறிய தேனும் – காய்ச்சும்
பாகிடை ஏறிய சுவையும்;
நனிபசு பொழியும் பாலும் – தென்னை
நல்கிய குளிரிள நீரும்,
இனியன என்பேன் எனினும் – தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!

என்ற பாரதிதாசனின் பைந்தமிழ் பாடல்வரிகள் தமிழின் இனிமையினைச் சிறப்பாகப் பறைசாற்றி நிற்கிறது. தமிழ்மொழியின் சொந்தக்காரர்களாகிய நாம் ‘தமிழ் எம் அடையாளம்’ என்ற கருப்பொருளில் இவ்வாண்டின் கலை நிகழ்வுகளைப் படைக்க இருக்கும் மாணவச் செல்வங்களை வாழ்த்தி, இவ்விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் இம்மலரினூடாக வரவேற்பதில் பெரிதும் உவகை அடைகிறேன்.

சிட்னியின் மேற்குப் பிராந்தியத்தில் 37 வருடங்களுக்கு முன்பு புலம் பெயர்ந்த மக்களின் தணியாத தாகமாக இருக்கும் தமிழ்ப்பற்று மற்றும் எதிர்காலச் சந்ததிக்கான தமிழ் மொழி, கலை மற்றும் கலாசார விழுமியத்தைக் கட்டி எழுப்ப ஆரம்பிக்கப்பட்டது வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம் ஆகும். இன்று இரண்டாம் தலைமுறை சிறார்களுக்கும் தமிழ்க் கல்வி மற்றும் கலை, கலாசாரம் கற்பிப்பதில் முன்னிலை வகிக்கிறது. இவ்வாறானதொரு பெருமிதம் மிகுந்த காலத்தில் நான் இக்கல்வி நிலையத்திற்குத் தலைமை ஏற்பதில் பெருமிதம் கொள்கிறேன். இதற்கு ஏற்ப இவ்வருடக் கருப்பொருளாகிய ‘தமிழ் எம் அடையாளம்’ என்பதும் அமைந்துள்ளது.

பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து அதிகரிக்கும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, வகுப்பறைகளைப் பெறுவதற்குக் காலத்திற்குக் காலம் தொடர்ந்து நிர்வாகக் குழுவினர் பல சவால்களைச் சந்தித்து வருகிறார்கள். அவ்வாறான ஒரு சூழ்நிலைக்கு இவ்வருட நிர்வாகமும் தள்ளப்பட்டிருந்தது. இதனைச் சரியான முறையில் நிவர்த்தி செய்வதற்கு எமது நிர்வாகக் குழு உறுப்பினர்களும் பாடசாலைகளிற் கிடையிலான ஒருங்கிணைப்பாளரும் அயராது பாடுபட்டு ஒரு தகுதியான இடத்தினை அமைத்துத் தந்துள்ளனர்.

பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி மற்றும் அறிவுத் திறமைகளை வெளிப்படுத்தும் பல முயற்சிகள் ஆண்டாண்டு காலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனை எவ்வாறு மெருகூட்டுவது அல்லது காலத்திற்கேற்ப தொழில்நுட்பம் சார்ந்த கற்பித்தல் முறைகளை அறிமுகப்படுத்துவது என்ற செயற்பாடுகளில் இவ்வருட நிர்வாகக் குழு மேலதிக ஆர்வம் காட்டி வருகிறது.

வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம், தமது மாணவர்களின் பாவனைக்காக வைத்திருக்கும் நூலகத்தில் உள்ள நூல்கள் சரியான முறையில் மாணவர்களின் வயது எல்லைக்கு ஏற்ற வகையில் தரம் பிரிக்கப் பட்டிருக்காமையினை அடையாளம் கண்டு, உரிய முறையில் வகைப்படுத்தி, இரண்டு வளாகங்களிலும் நூலகம் செயற்பட்டு வருகிறது.

தமிழ்க் கற்றலில் மேலதிக தேவையுள்ள மாணவர்களின் நலனில் கவனம் செலுத்தி, அதற்கேற்றாற்போல் ஆண்டு 4 முதல் ஆண்டு 9 வரைக்கும் ஒரு இணைப்பு வகுப்பு முறைமையினையும், ஆண்டு 10 வரை தமிழ்க் கல்வி கற்றுப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான Record of School Achievement (RoSA) சான்றிதழ் வழங்கும் ஒரு நிகழ்வும் இவ்வருடம் முதல் நடைமுறைக்கு வருகிறது.

பாடசாலை மாணவர்களின் சமூக ஊடகத் தொடர்பாடலைத் தவிர்ப்பதற்காக, நிர்வாகப் பணிகளுக்கு எனப் பாவனையில் உள்ள மென்பொருளில் மேலதிக அம்சங்களைச் சேர்த்து உள்ளோம். இதனூடாகவே பாடசாலையின் பிரதான செய்திகள் மாணவர்களின் பெற்றோருக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

மொழி, கலை கலாசார விழுமியங்களைத் தமிழ்ப் பாடசாலையெனும் திறவுகோலின் ஊடாக முன்னெடுத்துச் செல்ல உழைத்த அனைத்துத் தமிழ் ஆர்வலர்களின் ஆசீர்வாதத்துடனும், அதனைச் சரியான முறையில் போதிக்கும் ஆசிரியர்களுக்கும் நன்றி பாராட்டி, தமிழ்ப் பாடசாலையின் பணிகள் மென்மேலும் வளர நிர்வாகக் குழுவின் சார்பில் வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன்.

மூத்த இனம் தமிழினம், தமிழ் எம் அடையாளம்
என்னும் சிறப்பை என்றென்றும் பேணுவோம்.

நன்றி
சந்தானகிருஷ்னன் கணேசமூர்த்தி
தலைவர், நிர்வாக குழு 2025

# அதிபரின் செய்தி



தகுதி எனவொன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின். – திருக்குறள் 111

வென்றவேத்வில் தமிழ்க் கல்வி நிலையத்தின் இவ்வருட கலைவிழாவில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், நிர்வாக உறுப்பினர்கள், தொண்டர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவருக்கும், அதிபர்கள் சார்பில் மனமார்ந்த நன்றியையும், அன்பான வரவேற்பினையும் தெரிவித்துக் கொள்கிறோம். உங்கள் வருகை, இந்தக் கலைவிழாவை மேலும் சிறப்பிக்கிறது.

இன்று, மாணவர்கள் தங்கள் கலைத் திறமைகளை வெளிப்படுத்தும் அரிய வாய்ப்பாகும். உங்கள் உற்சாகம், ஆதரவு மற்றும் பாராட்டுகள் அவர்களுக்கு மிகுந்த ஊக்கமாக இருக்கும்.

இந்த ஆண்டில், பல புதிய முயற்சிகள் மற்றும் மாற்றங்களை மேற்கொண்டு எமது மாணவர்களின் தமிழ்க் கல்வித் தரத்தினை மேலும் உயர்த்தும் நோக்குடன் எமது பயணத்தைத் தொடங்கியுள்ளோம். கடந்த எட்டு மாதங்களில், பின்வரும் சிறந்த முயற்சிகளை, நிர்வாகக் குழு, கல்வி உப குழு, பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் செயல்படுத்தினோம்.

- மாணவர்களின் வயது மற்றும் தமிழ் மொழித் திறனுக்கேற்ற வகுப்பில் இணைத்துக் கொள்வதற்குரிய ஒரு முறையான வகுப்பு அமைப்பு (Class Structure) உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.
- எமது கல்வி நிலைய வருடாந்தப் பட்டமளிப்பு வைபவத்தில் ஆண்டு 10இல் தமிழ்க்கல்வியை நிறைவுசெய்யும் மாணவர்களுக்கான Record of School Achievement (RoSA) சான்றிதழ் வழங்கும் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- பெற்றோர்–ஆசிரியர் சந்திப்பிற்கான முன்பதிவு நடைமுறை, uEducateUs தளத்தின் மூலம் செயல்திறனுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. மாணவர் அறிக்கைகள் (Semester 1 & 2) தொடர்பான தரவுகளும் அதே தளத்தின் மூலம் முறையாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.
- சிறப்பாகப் பணியாற்றும் ஆசிரியர்களை அங்கீகரித்து ஊக்குவிக்கும் வகையில், 'சிறந்த ஆசிரியர் அங்கீகார விருது' என்ற புதிய விருது வழங்கப்படுகிறது.
- இந்த வருட பேச்சுப் போட்டிக்கான பேச்சுக்கள், காணொளி வடிவத்திலும் வெளியிடப்பட்டது, இது மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும், பேச்சுப்போட்டிகளுக்குத் தயாராவதற்கு மிகவும் உதவியளிக்கக் கூடியதாக இருந்தது.
- வகுப்பமைப்புகள், திட்டங்கள் மற்றும் பெற்றோர்–ஆசிரியர் சந்திப்புகள் அனைத்தும் சிறப்பாக நடைபெற்றன.
- HSC மாணவர்களின் முன்னேற்றத்தைத் தொடர்ந்து மதிப்பீடு செய்து, அவர்களை ஊக்குவித்து வழிகாட்ட எமது கல்வி நிலையம் உறுதியாகச் செயல்படுகிறது.
- பாலர்பள்ளி மற்றும் முன்பள்ளி வகுப்புகளில், குழந்தைகள் மற்றும் ஆசிரியர்களுக்கான கற்றல் சூழலை மேம்படுத்தும் நோக்கில், கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டுள்ளது. பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு, தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படும்.

இதனைத் தவிர, பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் பொருத்தமான ஆலோசனை மற்றும் பின்னூட்டங்களின் அடிப்படையில், தேவையான மாற்றங்களைத் தேவையைப் பொறுத்துச் செய்வதற்குப் பாடசாலை நிர்வாகம் எப்போதும் தயாராகவே உள்ளது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவர்கள் தங்கள் திறமைகளைக் கலைவிழாவில் வெளிப்படுத்தும் இவ் அரிய வாய்ப்பை நாங்கள் மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறோம்.

நன்றி மற்றும் வாழ்த்துகள்,

நந்தகுமாரன் கணபதிப்பிள்ளை
அதிபர், வென்றவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்

# செயலாளரின் செய்தி



'தமிழ் எம் அடையாளம்' எனும் கருப்பொருளில் இந்த வருடக் கல்விச் செயற்பாடுகளையும், கலைவிழாவினையும் நிகழ்த்திக் கொண்டிருக்கும் எமது கல்வி நிலைய மாணவர்களுக்கும், மற்றும் பாடசாலைச் சமூகத்தினர் அனைவருக்கும், நிர்வாகத்தினர் சார்பில் எனது வாழ்த்துகளையும் அன்பையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீண்டும் ஒரு சவாலான வருடத்தில், எமது பாடசாலை மூன்று வளாகங்களுடன், அவுஸ்திரேலியாவிலேயே பெரிய தமிழ்க்கல்விக் கூடங்களில் ஒன்றாக மிளிர்ந்து கொண்டிருக்கிறது. இதன் பின்னணியில் பல ஆயிரக்கணக்கான மாணவர்கள், பெற்றோர்களின், முப்பத்தியேழு வருடத் தொடர் பங்குபற்றலும், நூற்றுக்கணக்கான தொண்டர், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகம் சார்ந்த தொண்டர்கள் ஆகியோரின் தன்னலங்கருதா அர்ப்பணிப்புக்களும், வெள்ளிடை மலையாகவும், இலைமறை காயாகவும் பங்கு வகித்துக் கொண்டிருக்கிறது.

இந்த வருடமும், கல்வி, தொழிநுட்ப மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக, எமது நிர்வாகம் பல செயற்திட்டங்களை முன்னெடுத்ததோடு, அதன் பெறுபேறுகளைப் பாடசாலை உடனடியாகவே அனுபவித்து வருகிறது. இதன் விளைவாக அவுஸ்திரேலியாவில் இயங்கும் சமூகப் பாடசாலைகளிலேயே ஒரு முன்மாதிரிப் பாடசாலையாக விளங்குகிறது.

**uEducateUs செயலிப் பயன்பாடு:** இந்தச் செயலியின் பயன்பாடானது, மாணவர் முகாமை, பெற்றோர் தொடர்பாடல், பெற்றோர் ஆசிரியர் சந்திப்புகள், பெறுபேற்று அறிக்கைகள், அதிபர் விருதுகள், ஆசிரியர் சேவைக்கோவைகள், ஆசிரியர் பயிற்சிகள் மற்றும் தகுதி விபரங்கள், கட்டணம் செலுத்துதல் (நிதி) போன்ற பல்வேறு தளங்களில் விரிவாக்கப்பட்டு, 2023 இல் அறிமுகப்படுத்தபட்ட இந்த சேவையின் திருப்தியான பயன்பாட்டு நிலை இந்த வருடத்தில் அடையப்பட்டிருக்கிறது. வருங்காலங்களில் இது தொடர்ச்சியாக மேலாண்மை செய்யப்பட்டு உச்சப்பயன்பாட்டு நிலையினை அடைய வேண்டும்.

**கூட்டங்கள் மற்றும் சந்திப்புகள்:** இந்த வருடம் முழுவதும், நிர்வாக கூட்டம், உபகுழு கூட்டம், ஆசிரியர்கள் சந்திப்பு, பெற்றோர்கள் சந்திப்பு போன்ற அனைத்துக் கூட்டங்களும் ஒழுங்காக கூட்டப்பட்டதோடு, பாடசாலையின் தேவை கருதி பொருத்தமான வளவாளர்களுடன் ஆலோசனைக் கூட்டங்களும் இடம்பெற்றன.

**நிர்வாக கட்டமைப்பு:** இந்த வருடமும் நாளாந்தச் செயற்பாடுகளை மேலாண்மை செய்வதற்காக நிர்வாகக் கட்டமைப்பு, அணிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு அலகுகளுக்கும் பொறுப்பாளர்கள் (Leads) நியமிக்கப்பட்டு, மிகுந்த வினைத்திறனுடன், நாளாந்த பாடசாலைச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டது.

**மூன்றாவது வளாகம்:** தவணை மூன்றிலிருந்து எமது பாடசாலையின் மூன்றாவது வளாகமாக, பெண்டில்கில் உயர்தர (PHHS Campus) பாடசாலை இணைந்து கொண்டது. அரச பாடசாலைகளுடனான தொடர்பாடல் மிகவும் சவாலாகவுள்ள ஒரு கால கட்டத்தில், தொடர்பாடல் செயலகம் மற்றும் இணைப்பாளரூடாக இந்த விடயம் மிகவும் வினைத்திறனாகக் கையாளப்பட்டு வருகிறது.

மேற்கண்ட விடயங்கள் தவிர, பெரிதும் சிறிதுமாகத் தொழிநுட்ப மற்றும் நிர்வாக ரீதியாக பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதோடு, அவை அனைத்திற்கும் பாடசாலைச் சமூகத்தினரின் வலுவான ஆதரவும் கிடைக்கப்பெற்றது.

அடுத்தடுத்த வருடங்களில் வரும் நிர்வாகங்கள், பாடசாலை இயங்கு பொறிமுறையினை காலத்திற்கேற்றவாறு மீளாய்வு செய்து, அடுத்த தலைமுறையினரும் நிர்வாகத்தில் பங்கெடுக்கத் தக்க வகையில் தொழிநுட்ப மேலாண்மை மூலம் இலகுபடுத்தி, எமது பாடசாலையின் தொடர்ச்சியினையும் தடத்தினையும் மேலும் ஆழமாக, அவுஸ்திரேலிய மற்றும் புலம்பெயர் தமிழ்க் கல்விச் சமூகத்தில் பதிக்க வேண்டும் என வாழ்த்தி விடை பெறுகின்றேன். நன்றி. வணக்கம்.

நன்றியுடன்

ஜெகன் கிருபாதரன்
செயலாளர், நிர்வாக குழு 2025

# பொருளாளரின் செய்தி



வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையத்தின் 2025ஆம் ஆண்டிற்கான கலைவிழா மலரில், பொருளாளர் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இச் சந்தர்ப்பத்தில் பாடசாலையை வெற்றிகரமாக நிர்வகிப்பதற்காக மூன்று வளாகங்களிலும் இடைவிடாது உழைக்கும் அனைத்து நிர்வாக மற்றும் உப குழு உறுப்பினர்களுக்கும், தொண்டர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் பாடசாலையின் அதிபர்கள், ஆசிரியர்கள், தன்னார்வலர்கள் (Volunteers) மற்றும் பெற்றோர்கள் வழங்கிவரும் அளப்பரிய சேவைக்கு எவ்வளவு நன்றி, பாராட்டுக்கள் தெரிவித்தாலும் அவை போதுமானவையல்ல.

இந் நிதியாண்டில் நிதிக்குழு பல முக்கிய அம்சங்களை நிறைவேற்றுவதற்கு முயற்சி மேற்கொண்டது. அவற்றில் சில பின்வருமாறு

- இந்த வருடம், பாடசாலை தனது நிர்வாகச் செயல்பாடுகளை எளிமைப்படுத்தும் அடுத்த கட்டமாக uEducateUs செயலியின் கட்டண மேலாண்மை (Pay Management) தொகுதியை வெற்றிகரமாக அறிமுகப்படுத்தியது. இந்த மாற்றம் பெற்றோர்கள் தங்களுடைய நிதி பங்களிப்புகளை இலகுவாக செய்யவும், அது சம்பந்தமான தரவுகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ளவும் உதவும் என நம்புகிறோம்..
- இந்தக் கல்வி நிலைய நிர்வாகக்குழுவில் நான் முதற்தடவையாக இணைந்து பணியாற்றுகின்றேன். ஆகவே பாடசாலை செலவினங்கள் மற்றும் வருமான வழிகளை அறிந்து கொள்ளும் நோக்கத்துடன் ஒரு நிதி பகுப்பாய்வை மேற்கொண்டேன். அந்த பகுப்பாய்வில் பின்வரும் விடயங்கள் புலப்பட்டன,
    - பாடசாலையின் செயற்பாட்டு செலவினம் படிப்படியாக அதிகரித்து வருகிறது. 2023 ஆம் நிதியாண்டில் ஒரு மாணவருக்கான செலவு சராசரியாக $264 இருந்தபோதிலும், 2024 ஆம் நிதியாண்டில் அது $312 ஆக உயர்ந்திருக்கிறது. இது 18% அதிகரிப்பாகும்.
    - இந்த வருடத்திலிருந்து எமது பாடசாலை மூன்று வளாகங்களில் (GPS, MRPS மற்றும் PHHS) தொடர்ந்து செயற்பட்டு வருவதால், இவ் அதிகரிப்பு மேலும் அதிகரிக்கும் என்று எதிர்வு கூறப்படுகிறது.
    - மாணவர்களிடம் அறவிடப்படும் வருடாந்த வசதிக் கட்டணம் (Student Facilities Fees) $120 ஆக இருந்த போதிலும், 2023 ஆம் நிதியாண்டில் செலுத்தப்பட்ட கட்டணம் சராசரியாக $113 இல் இருந்து 2024 ஆம் நிதியாண்டில் $107 குறைவடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. இதனை நிவர்த்தி செய்ய சில நடவடிக்கைகள் எடுத்து வரப்படுகின்றன.
- வருடாந்தக் கட்டணத்தைக் காலம் தவறாது செலுத்திய பெற்றோர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், தவிர்க்கமுடியாத செலவுகளின் அதிகரிப்பினால், பாடசாலையின் தற்போதைய வருமானங்களை நீண்டகால நோக்குடன் மறுபரிசீலனை செய்யும் தேவையும் ஏற்பட்டுள்ளது.
- தன்னார்வ தொண்டர் ஆசிரியர்களுக்கான பயணக் கொடுப்பனவு முறை (Volunteer Teachers Travel Reimbursement) மேலும் சீராக்கப்பட்டதோடு, நிதிக்குழு மற்றும் நிர்வாகத்தின் வழிகாட்டலுக்கு அமைவாக, கொடுப்பனவு தற்போது மாதந்தோறும் வழங்கப்பட்டு வருகின்றது.
- பாடசாலையின் நிதி அறிக்கையினை (Financial Reporting) தயாரிப்பதற்கு Xero Accounting System எனப்படும் மென்பொருளினை கொள்வனவு செய்து பயன்படுத்தி வருகிறோம். மேலும், பாடசாலையின் நிலையான சொத்துப் பதிவேட்டை (Fixed Asset Register) மென்பொருளில் பதிவேற்றும் பணியில் இவ்வாண்டு நிதி உப குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர்.
- இந்த நிதியாண்டில் 2024 ஆம் ஆண்டிற்கான பல்துறை கலாசார மானியம் (Multicultural Grant) இரண்டாம் தவணை கிடைக்கப்பெற்றது. வருடம் தோறும் விண்ணப்பிக்கும் Per Capita Grant இற்கு இம்முறையும் விண்ணப்பித்துள்ளோம்.
- செலவுகளை மிகச் சிக்கனத்துடன் செயல்படுத்துகின்ற அதேவேளை செலவுகளைக் குறைக்கும் வழிகளை நிர்வாகக்குழு தொடர்ந்தும் ஆராய்ந்து வருகிறது.

இனிவரும் வருடங்களிலும், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என்ற ஒருங்கிணைந்த குடும்பமாக இணைந்து செயற்பட்டு, வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையத்தின் பெருமைமிக்க பயணத்தை மேலும் வலுப்படுத்தி வளப்படுத்துவோம்.

**'தமிழ் எம் அடையாளம்'** என்ற இவ்வருடக் கருப்பொருளிற்கு இணங்க, தமிழை முதன்மைப்படுத்தி, இளையோரை தமிழ் கற்க ஊக்குவிப்போம்.

நன்றி
திருச்செல்வகுமார் சிவபாதம்
பொருளாளர், நிர்வாக குழு 2025

# நிர்வாகக் குழு உறுப்பினர்கள்

தலைவர்



திரு. சந்தானகிருஷ்னன்
கணேசமூர்த்தி

உப தலைவர்



திரு நகுலேஸ்வரராஜா
இராசையா

உப தலைவர்



திரு லவன்
சிவதாஸ்

செயலாளர்



திரு ஜெகன்
கிருபாதரன்

உப செயலாளர்



திருமதி வினோதா
சுந்தர் வத்சலன்

உப செயலாளர்



திரு மயூரன்
தனபாலசிங்கம்

பொருளாளர்



திரு திருச்செல்வகுமார்
சிவபாதம்

உப பொருளாளர்



திருமதி. கார்த்திகா
பாலமோகன்

உப பொருளாளர்



திருமதி காயத்திரி
அரவிந்தன் கந்தராஜா

அதிபர்



திரு நந்தகுமாரன்
கணபதிப்பிள்ளை

உப அதிபர்



திரு புருஷோத்தமன்
ஜெயவரதராஜா

உப அதிபர்



திருமதி வினோதினி
செல்வராசா

உப அதிபர்



திரு ஹரன்
பத்மநாதன்

## செயற்குழு உறுப்பினர்கள்



திரு தயானந்தன்
சிதம்பரநாதன்



திரு அருண்
தேவேந்திரா



திரு சிவயோகநாதன்
சூரியகுமாரன்



திரு ஜெகதீஸ்வரன்
கந்தையா



திரு சியாமளன்
சபாநாதன்



திரு காங்கேயன்
கணேசலிங்கம்

# கல்வி உபகுழு உறுப்பினர்கள்


திரு. சந்தானகிருஷ்னன்
கணேசமூர்த்தி


திரு நந்தகுமாரன்
கணபதிப்பிள்ளை


திரு ஜெகன்
கிருபாதரன்


திரு புருஷோத்தமன்
ஜெயவரதராஜா


திருமதி வினோதினி
செல்வராசா


திரு ஹரன் பத்மநாதன்


திருமதி. இந்துமதி
சிறினிவாசன்


திருமதி கலைமதி
ஜெயாபரன்


திருமதி கௌரி
செந்தூரன்


திருமதி. சிவகாமி
தயாநிதி


திருமதி பிரவீனா
சத்யன்பரமதேவா


திரு ருஜேந்தன்
திருஞானம்


திரு வேலாயுதம்
ஜெயகாந்தன்


கலாநிதி மகேந்திரன்
ரூபவண்ணன்


திரு சிவநிரூபன்
சிவயோகம்

# நிதி உபகுழு உறுப்பினர்கள்


திரு சந்தானகிருஷ்னன்
கணேசமூர்த்தி


திரு திருச்செல்வகுமார்
சிவபாதம்


திரு ஜெகன்
கிருபாதரன்


திருமதி கார்த்திகா
பாலமோகன்


திருமதி காயத்திரி
அரவிந்தன் கந்தராஜா


திரு கோணேஸ்வரன்
பூரணசிங்கம்


திரு விமலன்
குமாரசூரியர்


திருமதி யசோதை சிவப்பிரியா
நிமால்சிறி


திரு பரமோகரன்
தங்கராஜா


திரு சிவரூபன்
திருஞானம்

# கலாசார உபகுழு உறுப்பினர்கள்


திரு சந்தானகிருஷ்னன்
கணேசமூர்த்தி


திரு லவன்
சிவதாஸ்


திரு நகுலேஸ்வரராஜா
இராசையா


திரு ஹரன்
பத்மநாதன்


திரு சியாமளன்
சபாநாதன்


திரு சாயிரூபன்
ஜெகநாதன்


திரு சுதாகரன்
தவரட்னராஜா


திரு வத்சலன்
தியாகராஜா


திருமதி கவிதா
முனியன்


திரு தனபாலசிங்கம்
ரவிசங்கர்


திரு யாதவன்
பாலச்சந்திரன்


கலாநிதி. வினோத்
ஜெயரத்னம்


திருமதி சுகரூபா
உமாசங்கர்

சமூகமளிக்காதவர்
திரு. அறிவழகன் மகாலிங்கம்

# பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் உபகுழு உறுப்பினர்கள்


திரு. சந்தானகிருஷ்னன்
கணேசமூர்த்தி


திரு நகுலேஸ்வரராஜா
இராசையா


திரு லவன்
சிவதாஸ்


திரு ஹரன்
பத்மநாதன்


திரு அருண்
தேவேந்திரா


திரு சியாமளன்
சபாநாதன்


திருமதி லட்சுமி
ஜெரூபன்


திருமதி இராசபாக்கியம்
ஆனந்தசோதி


திருமதி நிரஞ்சனா
சிறீரங்கநாதன்


திருமதி கோமதி
நரேஷ்குமார்


திரு சுதாகரன்
காங்கேயன்


திரு பாலசுப்பிரமணியம்
பாலமோகன்


திரு சத்யன்பரமதேவா
பரமநிருபன்

# தகவல் தொழிநுட்ப மற்றும் நிர்வாக உபகுழு உறுப்பினர்கள்


திரு சந்தானகிருஷ்னன் கணேசமூர்த்தி


திரு ஜெகன் கிருபாதரன்


திருமதி வினோதா சுந்தர் வத்சலன்


திரு மயூரன் தனபாலசிங்கம்


திரு தயானந்தன் சிதம்பரநாதன்


திரு காங்கேயன் கணேசலிங்கம்


திரு ஆரூரன் கந்தசாமி


கலாநிதி அருணன் சிவநாதன்


திரு ஜெனோசன் அன்னலிங்கம்


திருமதி ஜெயவாணி ரிஷிகேசன்


திரு சிவபாலா ஆறுமுகம்


திருமதி தாரகா சிறீதவன்

# இணைப்பாளர்கள்

உயர்தர இணைப்பாளர்கள்


கலாநிதி பரா பரமேஸ்வரன்


திருமதி இந்துமதி சிறினிவாசன்


திரு செந்தில்குமரன் திருநாவுக்கரசு

நூலக இணைப்பாளர்கள்


திரு. சிவபாலா ஆறுமுகம்


திருமதி. தாரகா ஸ்ரீதவன்

மாணவத்தலைவர் மற்றும் ஒழுக்க இணைப்பாளர்


திரு நகுலேஸ்வரராஜா இராசையா

தொடர்பாடல் இணைப்பாளர்


திரு குமரன் ஜெயபாலன்

மானிய இணைப்பாளர்


திரு. விமலன் குமாரசூரியர்

பயிற்சி மற்றும் விருதுகள் இணைப்பாளர்


திருமதி பிரவீனா சத்யன்பரமதேவா

மென்பொருள் இணைப்பாளர்கள்


திரு ஆரூரன் கந்தசாமி


கலாநிதி அருணன் சிவநாதன்

# நீண்டகால ஆசிரிய சேவையாற்றியவர்கள்



20 வருடங்கள் சேவையாற்றியவர்

திருமதி புஷ்பா ரமணா



15 வருடங்கள் சேவையாற்றியவர்

திருமதி அருணா சிவானந்தன்



10 வருடங்கள் சேவையாற்றியவர்

திருமதி மாதுமையாள் திருக்குமரன்

5 வருடங்கள் சேவையாற்றியவர்கள்



செல்வி ஹரினி
சோமசுந்தரம்



செல்வி புராதனி
கிருபாகரன்



செல்வி அஞ்சலா
ரஞ்சித்

செல்வி பூமிஜா சண்முகதாஸ் (புகைப்படம் இல்லை)

## மலர்க்குழு 2025

சந்தானகிருஷ்னன் கணேசமூர்த்தி, ஜெகன் கிருபாதரன்,
புருஷோத்தமன் ஜெயவரதராஜா, ஹரன் பத்மநாதன்,
தயானந்தன் சிதம்பரநாதன், மதுமதி ரஞ்சித்பத்மஜீ




## சமூக மொழிப் பாடசாலைகளின் தூதுவர் – 2025
## Community Language School Ambassador - 2025

### செல்வி பிருந்தா ஸ்ரீரங்கன்

வென்றுவேத்வில் தமிழ்க் கல்வி நிலையத்தின் பழைய மாணவியும், உயர்தரத்தில் (HSC) தமிழ்ப் பாடத்தில் Band–6ல் சித்தி பெற்றவரும், 2017 ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட விருதில் Highly Commended பெற்றவரும் தற்போது எமது கல்வி நிலையத்தில் ஆசிரியையாகவும் பணியாற்றி வரும் செல்வி பிருந்தா ஸ்ரீரங்கன், சமூக மொழிப் பாடசாலைகளின் தூதுவராக தெரிவு செய்யப்பட்டதனைப் பெருமையுடன் தெரியப்படுத்துவதுடன் அவரைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

மேலும் தனது கற்பித்தல் திறனை மேம்படுத்தும் நோக்கில் 2024 ஆம் ஆண்டு சிட்னி பல்கலைக்கழகத்தின் SICLE கற்பித்தல் பாடநெறியை நிறைவு செய்ததோடு, சிறந்த மூன்று ஆசிரியமாணவர்களில் ஒருவராகத் திகழ்ந்து, தனது அர்ப்பணிப்பையும் சிறப்பையும் நிரூபித்துள்ளார்.

வென்றுவேத்வில் தமிழ்க் கல்வி நிலையத்தைத் தாண்டியும், UTS தமிழ் சங்கத்தில் தலைமைப் பொறுப்புகள், Commonwealth Bank இல் தன்னார்வ மொழிபெயர்ப்பாளர் சேவை, மேலும் கலை நிகழ்ச்சிகள், ஆலய நிகழ்வுகள், வானொலி, இலக்கியம் போன்ற பல தளங்களில் பங்கெடுத்து வரும் அவர், எதிர்காலத் தலைமுறைக்கு ஒருமுன்மாதிரியாகத் திகழ்கிறார்.

---




## கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட விருது –2025
## Highly Commended – சிரேஷ்டபிரிவு

### செல்வன் திகாஷ் பாலஈஸ்வரன்

வென்றுவேத்வில் தமிழ்க் கல்வி நிலையத்தில் ஆண்டு 12 உயர்தரத்தில் கல்வி கற்கும் செல்வன் திகாஷ் பாலஈஸ்வரன், 2025ம் ஆண்டு கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட விருதில் Highly Commended சான்றிதழைப் பெற்றுள்ளார் என்பதனைப் பெருமையுடன் தெரியப்படுத்துவதுடன் அவரைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

இவர் தமிழ் மற்றும் ஆங்கிலப் பாடங்களில் மட்டுமல்லாது, பேச்சு, எழுத்து, விவாதம், கவிதை, நாடகம், நடனம் போன்றவற்றிலும் சிறந்துவிளங்கி, தேசிய, சர்வதேச விருதுகளைப் பெற்றுள்ளார். மாணவத்தலைவர், விளையாடு இல்லத்தலைவர், Army Cadet, St John Ambulance Cadet போன்ற தலைமைப் பொறுப்புகளையேற்றுத் தன்னை ஒரு பொறுப்புணர்வுடைய தலைவராக வெளிப்படுத்துகிறார்.

---




## கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட விருது –2025
## Highly Commende - கனிஷ்டபிரிவு

### செல்வி மோகிதா செல்வராசா

வென்றுவேத்வில் தமிழ்க் கல்வி நிலையத்தில் ஆண்டு 6 ல் கல்வி கற்கும் செல்வி மோகிதா செல்வராசா, 2025ம் ஆண்டு கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட விருதில் Highly Commended சான்றிதழைப் பெற்றுள்ளார் என்பதனைப் பெருமையுடன் தெரியப்படுத்துவதுடன் அவரை பாராட்டி வாழ்த்துகிறோம்.

இவர் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் எமது கல்விநிலையத்தில் 100% வருகைக்கான சான்றிதழைப் பெற்றுள்ளார், தனது ஆரம்பப் பாடசாலையில், வகுப்பின் ஒரே பெண் SRC (Student Representative Council) உறுப்பினராகத் தெரிவாகியுள்ளார். தமிழ்ப் போட்டிகள், நாடகம், நடனம், சமூக நிகழ்வுகளில் சிறந்து விளங்கி, அர்ப்பணிப்புள்ள மாணவியாகத் திகழ்கிறார்.

# WTSC Team Structure 2025



# ஆசிரியர்குழு


திரு நந்தகுமாரன்
கணபதிப்பிள்ளை
**அதிபர்**


திரு புருஷோத்தமன்
ஜெயவரதராஜா
**உப அதிபர் – மேற்பிரிவு**


திருமதி வினோதினி
செல்வராசா
**உப அதிபர் – கீழ்ப்பிரிவு**


திரு ஹரன்
பத்மநாதன்
**உப அதிபர் – கீழ்ப்பிரிவு**


திருமதி நிர்மலா
இராசலிங்கம்


திருமதி சிவகாமி
தயாநிதி


திருமதி கௌரி
முருகானந்தன்


திருமதி சாரதா
அமிர்தலிங்கம்


திருமதி புஷ்பா
ரமணா


திருமதி கௌரி
இமானுவேல்


திருமதி மதுமதி
ரஞ்சித் பத்மஜீவா


திருமதி கல்யாணி
நிரோஷன்


திருமதி சகிலா
தேவகரன்


திருமதி இந்துமதி
சிறினிவாசன்


திருமதி அருணா
சிவானந்தன்


செல்வி சௌந்தரி
கணேசன்


திருமதி கலைமதி
ஜெயாபரன்


திருமதி சுபாஜினி
தணிகைராஜன்


திரு ஜெகேந்திரா
அவினாசிநாதன்


திருமதி நாகசொரூபினி
சிவரஞ்சன்


திருமதி நாகப்பிரபா
கிரிந்தன்


திருமதி மாதுமையாள்
திருக்குமரன்


திருமதி நிஷாந்தி
யேசுராசா


செல்வி சர்வாம்பிகா
சுபாங்கன்

# ஆசிரியர்குழு...


திருமதி தெய்வநாயகி
சந்தானகிருஷ்ணன்


திருமதி கல்பனா
பத்மதீபன்


திருமதி இந்திரகுமாரி
யோகராஜா


திருமதி கமலாம்பிகை
பாலசுப்ரமணியம்


திருமதி இந்திராதேவி
யோகேந்திரம்


திருமதி ஜசோதாதேவி
குரூஸ்


திருமதி கோமதி
மதுசூதனன்


திருமதி தர்ஷினி
சுதர்சன்


திருமதி கௌசிகா
தயானந்தன்


திருமதி நீரஜா
யாதவன்


திருமதி கௌரி
செந்தூரன்


திருமதி சுபாஷினி
கோணேஸ்வரன்


திருமதி சண்முகப்ரியா
சுதாகரன்


செல்வி பிருந்தா
ஸ்ரீரங்கன்


திரு கிரிஷோத்
கமலநாதன்


திரு கேசவா
காந்தன்


திருமதி ஜயந்தி
லோரன்ஸ்


திருமதி மகேஸ்வரி
சந்திரஹாசன்


திருமதி பவித்ரா
பாலஈஸ்வரன்


திருமதி சிவகலை
கிருபாகரன்


திருமதி நிதர்ஷினி
செல்வகுமார்


செல்வி ஹரினி
சோமசுந்தரம்


செல்வி அஞ்சலா
ரஞ்சித்


செல்வி புராதனி
கிருபாகரன்


திருமதி நளினா
நரேந்திரநாதன்

# ஆசிரியர்குழு...


திரு இரோஷன்
புவிராஜ்


திருமதி துளசிகா
ருபேஷ்


திருமதி பூரணி
சிறிகரன்


செல்வி அபிராமி
நரேந்திரநாதன்


திருமதி ஜனனி
கிஷோர் குமார்


திருமதி இவஞ்சலின்
சுசாந்தன்


திருமதி ஷாழினி
உதயஸ்ரீ


திருமதி ஜனனி
செந்தில்குமரன்


திரு அகலவன்
ஸ்ரீஸ்கந்தராஜன்


செல்வி ஹர்சா
கமலநாதன்


திருமதி மதிவதனி
விஜயானந்தன்


திருமதி கதிர்விழி
குகச்சந்திரன்


திருமதி கலாறாஜி
அசோகபாலன்


செல்வி நவகீர்த்தனா
ஜெகதீஸ்வரன்


செல்வி அஷ்வினி
செந்திலதிபன்


செல்வி வாமிகா
குகனேஸ்வரன்


செல்வி தேஜஸ்வினி
சஜீவ்


செல்வி அபினா
மங்களேஸ்வரன்


செல்வி சிவாசினி
சிவதாசன்


செல்வி மகதி
ராமசுப்பிரமணியன்


திரு றோசாந்த்
யசோதரன்


செல்வி அஷ்விதா
செந்தில்குமரன்


செல்வி ராகவி
பலராமன்


செல்வி சந்தோஷி
நந்தகுமார்


செல்வி மாதங்கி
சக்திவேல்

# ஆசிரியர்குழு...



செல்வி சுபாங்கி
சக்திவேல்



திரு அபிஷோத்
கமலநாதன்



திரு ஜெய்டன்
ஜெயச்சந்திரா



செல்வி பவானுஜா
குகச்சந்திரன்



செல்வி அபிஷா
கமலநாதன்



திரு கர்ணன்
சண்முகசுந்தரம்

சமூகமளிக்காதவர்கள்: செல்வி பூமிஜா சண்முகதாஸ் & திருமதி நீரஜா அறிவழகன்

---

## பதில் ஆசிரியர்கள்



திரு யோவான்
ரைற்றஸ்



திருமதி டினோஷா
தனரூபன்



திரு ஜெயச்சந்திரா
அலோசியஸ் ஜெயமன்னன்

சமூகமளிக்காதவர் : திரு வினோத் பீரிஸ்

---

## ஆசிரிய உதவியாளர்



செல்வி நிவேதிதா
துரைராஜு

# வகுப்புகளும் கலைநிகழ்ச்சிகளும்

| வகுப்பு | மாணவர் எண்ணிக்கை | 2025 கலைவிழா நிகழ்ச்சி |
|---|---|---|
| பாலர்பள்ளி – அமுதம் | 22 | நடனம் – ஓடி விளையாடு பாப்பா |
| முன்பள்ளி – மயில் | 24 | நடனம் – தமிழின் பெருமை |
| முன்பள்ளி – கிளி | 28 | நடனம் – புத்தம் புது பூமி வேண்டும் |
| ஆரம்பப்பள்ளி – வாத்து | 27 | நடனம் – கொட்டிமேளம் கொட்டி கொண்டாடு |
| ஆரம்பப்பள்ளி – புறா | 27 | நடனம் – இது மூத்த மொழி |
| ஆரம்பப்பள்ளி – குயில் | 29 | நடனம் – சின்ன சின்ன ஆசை |
| ஆண்டு 1 – சிவப்பு | 26 | நடனம் – நாட்டுப்புறப் பாடல் ‘தோட்டுக்கடை ஓரத்தில்’ |
| ஆண்டு 1 – மஞ்சள் | 26 | நடனம் – எட்டுக்குள் அடங்கும் வாழ்க்கை |
| ஆண்டு 1 – நீலம் | 24 | நடனம் – இயற்கை பற்றிய பாடல் |
| ஆண்டு 2 – தாமரை | 22 | நடனம் – இசையே இசையே |
| ஆண்டு 2 – மல்லிகை | 24 | நடனம் – திரையிசைப் பாடல் ‘ஆச்சாலே’ |
| ஆண்டு 2 – செவ்வரத்தை | 23 | நடனம் – தாய் நாட்டின் தாகம் |
| ஆண்டு 3 – சந்திரன் | 19 | நடனம் – தாயவளே தமிழ் மண்ணே |
| ஆண்டு 3 – நட்சத்திரம் | 18 | நடனம் – தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா |
| ஆண்டு 3 – சூரியன் | 21 | நடனம் – காவடி, கிராமிய நடனம் |
| ஆண்டு 4 – பாரதிதாசன் | 24 | நடனம் – கிராமிய நடனம் |
| ஆண்டு 4 – கண்ணதாசன் | 20 | நடனம் – எம்மதமும் சம்மதமாகும் |
| ஆண்டு 4 – சோமசுந்தரப்புலவர் | 22 | நடனம் – கடையம் (உழவர் நடனம்) |
| ஆண்டு 5 – கம்பர் | 20 | நடனம் – தையே தையே! தமிழர் திருநாள் தையே! |
| ஆண்டு 5 – கபிலர் | 18 | நடனம் – தேன்தமிழ் போற்றுவோம் |
| ஆண்டு 4–6 – நாவலர் | 9 | நாடகம் – தமிழ் ஏலியன் |
| இணைப்பு வகுப்பு 4–6 – பாரதி | 11 | நாடகம் – பாட்டி சுட்ட வடைக்கு என்னதான் ஆச்சு |
| ஆண்டு 6 – வள்ளுவர் | 29 | நடனம் – கிராமிய நடனம் |
| ஆண்டு 6 – புகழேந்தி | 29 | நடனம் – கிராமிய நடனம் – கும்மி, ஒயிலாட்டம், கோலாட்டம் |
| ஆண்டு 7 – கணியன் பூங்குன்றனார் | 15 | நாடகம் – மானமே பெரிது |
| ஆண்டு 7 – வீரமாமுனிவர் | 19 | நாடகம் – எமது அடையாளம் எது? ஒரு தேடல் |
| ஆண்டு 7–9 – விபுலானந்தர் | 13 | நடனம் – முன் செல்லடா |
| இணைப்பு வகுப்பு 7–9 – ஔவை | 5 | |
| ஆண்டு 8 – தனிநாயகம் | 14 | நாடகம் – ஔவையாரின் புலமை |
| ஆண்டு 8 – இளங்கோ | 12 | |
| ஆண்டு 9 – நக்கீரர் | 20 | நாட்டிய நாடகம் – ‘அல்லி அருச்சுனன்‘ |
| ஆண்டு 10 – RoSA பரணர் | 4 | நாடகம் – ‘குழந்தைகள் பாவனை செய்யும்’ |
| ஆண்டு 10 – HSC பரிமேலழகர் | 38 | நாடகம் – ‘சிலம்பரசி’ சிலப்பதிகாரம் |
| ஆண்டு 11 – HSC தொல்காப்பியர் | 27 | நாடகம் – மாவீரன் |
| ஆண்டு 12 – HSC அகத்தியர் | 33 | நடனம் – ஆடல் காண்போம் |
| மாணவர் எண்ணிக்கை | 742 | |

# மாணவத் தலைவர்கள்



**முன்வரிசை இடமிருந்து வலமாக:** உப தலைவர் – நகுலேஸ்வரராஜா இராசையா, மாணவத் தலைவர்கள்: அப்ஸராபாலமோகன், சிவானி ஜேசுராசா, வினுஷா உருத்திரன், திசானா யோகேந்திரம், ஆரணி விஜயானந்தன், ராகவி ரகுபரன், ஓவியா மணிராஜ், சுபீனா சிவபாலா, கவியா மங்களேஸ்வரன், அதிபர் – நந்தகுமாரன் கணபதிப்பிள்ளை.
**பின் வரிசை இடமிருந்து வலமாக:** மாணவத் தலைவர்கள்: ஸ்ரீஷா கிஷோகுமார், வினோதிஹா வினோதன், அபிஷ் நந்தகுமாரன், யூட் டியூலன் செசிலியூஸ், பவேஷ், சுசீந்திரன், யாழவன் தமிழ்ச்செல்வன், யதுசன் பகீரதன், மஞ்சரி ஜீவன், துளசி மயூதரன்.
ஹரி பிரபாகரன் – சமூகமளிக்கவில்லை

# பாலர்பள்ளி – அமுதம்



## முன்பள்ளி – கிளி



## முன்பள்ளி – மயில்



## ஆரம்பப்பள்ளி – குயில்



## ஆரம்பப்பள்ளி – புறா



## ஆரம்பப்பள்ளி – வாத்து



## ஆண்டு I – நீலம்



## ஆண்டு 1 – சிவப்பு



## ஆண்டு 1 – மஞ்சள்



## ஆண்டு 2 – செவ்வரத்தை



## ஆண்டு 2 – தாமரை



## ஆண்டு 2 – மல்லிகை



## ஆண்டு 3 – சந்திரன்



## ஆண்டு 3 – சூரியன்



## ஆண்டு 3 – நட்சத்திரம்



## ஆண்டு 4 – கண்ணதாசன்



## ஆண்டு 4 – பாரதிதாசன்



## ஆண்டு 4 – சோமசுந்தரப்புலவர்



## இணைப்பு வகுப்பு (4–6) – பாரதி



## ஆண்டு 4 – நாவலர்



## ஆண்டு 5 – கம்பர்



## ஆண்டு 5 – கபிலர்



## ஆண்டு 6 – புகழேந்தி



## ஆண்டு 6 – வள்ளுவர்



## ஆண்டு 7 – வீரமாமுனிவர்



## ஆண்டு 7 – கணியன் பூங்குன்றனார்



## இணைப்பு வகுப்பு (7 – 9) – ஔவை



## ஆண்டு 7 – 9 விபுலானந்தர்



## ஆண்டு 8 – தனிநாயகம்



## ஆண்டு 8 – இளங்கோ



## ஆண்டு 9 – நக்கீரர்



## ஆண்டு 10 – RoSA பரணர்



## ஆண்டு 10 – HSC பரிமேலழகர்



## ஆண்டு 11 – HSC தொல்காப்பியர்



## ஆண்டு 12 – HSC அகத்தியர்




ஆதிரையன் ஜெயகாந்தன்
பாலர் அமுதம்


தமிழ்
மொழி
வாழ்க
லிதுசன் சஞ்சீவன்
பாலர்பள்ளி


நயன பல்லவி


அக்சயன் ஹமிலன்
கிளி வகுப்பு


ஆதிரா அரவிந்தன்
முன்பள்ளி - கிளி.


அக்கா தங்கை
ஆரலி வாசுகன்
முன்பள்ளி - கிளி


ஆத்விகன்
முன் பள்ளி - கிளி


அர்ஜுன். ஜெயபாலன்
முன்பள்ளி. குயில்


மரம் வளர்ப்போம்
முன் பள்ளி
மயில்


பேருந்து.
ஆரன்
(முன் பள்ளி)
மயில்.


பூச்சி
முன்பள்ளி
மயில்


kindergarten
மயில்


சிவாதன் - முன்பள்ளி - மயில்
டைனோசர்


சிவதன்யா - முன்பள்ளி - மயில்
பொம்மை


எனது குடும்பம்.
ஆதிரா
ஆரம்பப்பள்ளி குயில்.


பெயர் -: ஸ்ரிபன் பெஞ்சமின்
வகுப்பு -: குயில்
அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ
ஒ ஓ ஔ ஃ







## அம்மா



1. இவர் என் அம்மா.
2. என் அம்மா அன்பானவர்.
3. என் அம்மா அழகானவர்.
4. எனக்கு அம்மாவைப் பிடிக்கும்.
5. அம்மா தமிழ்ப் பாடம் சொல்லித் தருவார்

தன்விஹா
ஆரம்பப்பள்ளி குயில்




எனது வானவில்
ஆரம்பப்பள்ளி-குயில்


வானவில்
ஆரம்பப்பள்ளிகுயில்


Kinder Kuyil


நானும்
மழையும்
ஆர்யன் பிரணவன்
ஆரம்பப்பள்ளி-
புறா


Aviana Ediveerasinghe
ஆரம்பப்பள்ளி - புரா
நடுவே மலைகள்


மழை
ஆராதனா
புரா - ஆரம்ப பள்ளி


சிங்கம்


கேசிகன் மயூரன்
ஆரம்பப்பள்ளி புரா
கைப்பொங்கல்











KV2025

அனகன் குகரூபன்
ஆரம்பப்பள்ளி - புரா

வனக்கம்,
என் பெயர் அனகன்.
எனக்கு நான்கு வயது.
எனக்கு தமிழ் படிக்க
விருப்பம்.
நன்றி, அனகன்.


சூரியஅஸ்தமனம்
அஹானா லியோன்
ஆரம்பபள்ளி


வண்ணமயமான
இலங்கை
அருஞ்செழியன்


சு. அயானா
பாலர் வகுப்பு


மரங்கள் பழம்
வளர்ப்போம் பறிப்போம்


வண்ணத்துப் பூச்சி
மயூரி அறிவழகன்
ஆரம்பப் பள்ளி - வாத்து


அகரன் ஜெயகாந்தன் - ஆரம்ப பள்ளி (வாத்து)


ராதுர்யா கிருஷ்ணரமணன்
ஆரம்பப்பள்ளி
வாத்து


தேசியக் கொடிகள்
சாதனா ஆரம்பப்பள்ளி



வானவில்
வீடு
மரம்
குளம்




தியான்பல்
வாத்து




ஆதிரா ஆதவன்
ஆண்டு 1 "மஞ்சள்"




காலைக்காட்சி


பழங்கள்
க.ஆத்விக்
ஆண்டு-1
மஞ்சள்
•பழங்கள் மிகவும் சுவையானவை.
•அவை பல நிறங்களில் உள்ளன.
•மா, பலா, வாழை என்பன முக்கனிகள் என அழைக்கப்படும். எனக்கு பழங்களை மிகவும் பிடிக்கும்.


மரம்.. வளர்ப்போம்
உலகைக் காப்போம்
நிலவன்
கெதீஸ்வரன்
ஆண்டு 1
மஞ்சள்


வானவில்
அனிஸ்கா
நிரோசாந்த்
ஆண்டு1 மஞ்சள்


இனிய பொங்கல்
நல்வாழ்த்துக்கள்
அக்ஷய் ராஜீவ்
ஆண்டு 1

திருக்குறள்

குறள்:
அகர முதல எழுத்தெல்லாம் ஆகி
பகவன் முதற்றே உலகு

விளக்கம்:
அகரமே தமிழ் மொழிக்கு முதலெழுத்தாக
அமைந்ததைப் போலவே இந்த பரந்த
அகிலத்திற்கும் உயிர்கட்கும் எல்லாம்
வல்ல அந்த ஆதிபகவனே முதல்வன்

மேதஸ்வி
ஆண்டு 1
வகுப்பு மஞ்சள்



இது யானை
யானை பிளிறும்

ஆண்டு-1
கி. லெ. தி. ருத்ரேஷ்




எனது வீடு

ஜஸ்விகா அகிலழகன்
ஆண்டு 1: நீலம்




எனது குடும்பம்
அப்பா
அம்மா
தம்பி
நான்
அக்ஷிகா
கோபிதரன்
ஆண்டு 1 : நீலம்


தமிழர் திருநாள் தைப்பொங்கல்
சான்ஜோன்
ஆண்டு–1–நீலம்


போனட்
குட்டி முயல்
ஆண்டு 1 – நீலம்
மிதுஷா சபேஷ்


டி - ரெக்ஸ்
மகிழ்நன்
ஆண்டு - 1


பகல் நேரம்
கின்னிலா வாசுதன்
ஆண்டு 1 நிலவம்
எங்கும் வெளிச்சமாக இருக்கும்


அண்ணா
அம்மா
அக்கா
நான்
அப்பா
அகிலா
பாலச்சந்திரன்
ஆண்டு 1
சிவப்பு


பி.கேஷவ்
ஆண்டு-2
தாமரை
தைப்பொங்கல்


நாய்க்குட்டி - என் செல்லப் பிராணி
சாய் ப்ரணவ்
ஆண்டு 1 சிவப்பு


அன்பு
அக்ஷரா பாலமோகன் -ஆண்டு 1


கிளி
சகானா
சகானா தேவேந்திரா . ஆண்டு 1 - சிவப்பு


ஆரணன்-அரவிந்தன் ஆண்டு 1 சிவப்பு


ஆண்டு 1
மொனிசா


மகாகவி பாரதியார்
செ.பிரதோஷ்
ஆண்டு 1
சிவப்பு
பாரதியார் ஒரு தமிழ்க்கவிஞர்.
② பாரதியார் குழந்தைகளுக்கான
பாப்பா பாட்டு பாடியவர்.
③ பாரதியார் தமிழ்
மொழியை நேசித்தார்.


1 சிவப்பு


டொனால்டியோ - Year 1- சிவப்பு


தென்னை மரத்தின் பயன்கள்
• தேங்காய்
• இளநீர்
• மரம்
• சிரட்டை
• தென்னோலை
ஆண்டு - 2 மல்லிகை
ஜீவித் ஆதவன்


எனது குடும்பம்
அண்ணா அக்கா அப்பா அம்மா நான்


எனது சித்திரம் கேஷிகா ஆண்டு -2


திவ்யன் - ஆண்டு 2 மல்லிகை
எனக்கு பிடித்த விளையாட்டு
உதைபந்து


காலைக்காட்சி
vamika
ஆண்டு - 2


எனது குடும்பம்


கிராமம்
நகரம்
ஆண்டு 2 செவ்வரத்தை


எனது வீடு
2 செவ்வரத்தை


வினுஜா சதீஸ்வரன்
செவ்வரத்தை-ஆண்டு-2

நல்லூர்
கந்தசாமி
கோயில்




கஷ்ணிகா சூரியகுமார் - சந்திரன் ஆண்டு 3



கோடை நாளில் மருப்ரா கடற்கரையை வானத்திலிருந்து பார்த்த பொழுது.

ஷர்தா.S
Year 3 · Santhiran



# ஆத்தி சூடி

அறம் செய விரும்பு
இயல்வது கரவேல்
உடையது விளம்பேல்
எண் எழுத்து இகழேல்
ஐயம் இட்டு உண்
ஓதுவது ஒழியேல்
அஃகம் சுருக்கேல்

ஆறுவது சினம்
ஈவது விலக்கேல்
ஊக்கமது கைவிடேல்
ஏற்பது இகழ்ச்சி
ஒப்புரவு ஒழுகு
ஔவியம் பேசேல்

- ஔவையார்

பிரியனான் சஞ்சீவன்
ஆண்டு 2 தாமரை

## பருவ காலங்கள்

நான் வசிக்கும் நாடு அவுஸ்திரேலியா. இங்கு கோடை காலம், இலையுதிர் காலம், குளிர் காலம், வசந்தகாலம் என்று நான்கு பருவ காலங்கள் உள்ளன







எனது பெயர் கிரிஷான்.
எனக்கு தமிழ் படிக்க விருப்பம்.
தமிழ் எனது பெற்றோரின் தாய் மொழி.
தமிழ் உலகின் ஆதி மொழிகளில்
ஒன்று.

கிரிஷான்
ஆண்டு-3 நட்சத்திரம்

- தைப்பொங்கல் -

இது தமிழர்களின் பண்டிகை ஆகும்.
கதிரவனுக்கும் உழவர்களுக்கும் நன்றி செலுத்துவதற்காக கொண்டாடப்படுகிறது.



தியட்ஷயா நிஷாகாந் ஆண்டு-3 சந்திரன்


கண்ணதாசன்


எனது வீட்டுத் தோட்டம்
ஆண்டு - 4
சோமசுந்தர புலவர்
ஆன்ஷிகா


நான் விரும்பும் உணவு
அணி 3 சந்திரன்


திருக்குறளை
எழுதியவர்
திருவள்ளுவர்
ஆண்டு-3
சூரியன்


சிட்னி முருகன்
கோவில்
ஆண்டு - 3


ஔவைப் பாட்டி
ஔவைப் பாட்டி ஒரு தமிழ் புலவர்.
அவர் ஆத்திச் சூடி, கொன்றை வேந்தன் ஆகிய படைப்புகளை இயற்றியவர்.
ஔவைப் பாட்டியை எனக்கு மிகவும் பிடிக்கும்
ஆரணி பாலசந்திரன்
ஆண்டு 4
பாரதிதாசன்


அரசு சின்னம்
AUSTRALIA
மாயோன் ஜெகன்
ஆண்டு-4
பாரதிதாசன்


யானை
தமிழ் கலாச்சாரத்தில் யானைகள் ஞானம், பலம் மற்றும் நல்ல அதிர்ஷ்டத்தின் அடையாளமாக மதிக்கப்படுகின்றன.
அத்துடன் யானைகள் பாதுகாப்பு, செழிப்பு மற்றும் நீண்ட ஆயுளையும் குறிக்கின்றன.
ப. ஆராதனா
ஆண்டு-4 (பாரதிதாசன்)

ரிதுநன்
ஆண்டு 4 - பாரதிதாசன்



## விளையாட்டுகள்

விளையாட்டுகளில் பல வகை உண்டு அதில் கால்பந்து விளையாட எனக்கு விருப்பம். 11 வீரர்கள் ஒவ்வொரு அணியிலும் விளையாடுவாாகள். ஒரு கால்பந்து விளையாட்டில் மொத்தம் 22 வீரர்கள் விளையாடுவார்கள்.



ஷ்ரவன்
சாயிரூபன்
ஆண்டு 4
பாரதிதாசன்.

## ஆத்தி சூடி

அறம் செய விரும்பு
ஆறுவது சினம்
இயல்வது கரவேல்
ஈவது விலக்கேல்
உடையது விளம்பேல்
ஊக்கமது கைவிடேல்
எண் எழுத்து இகழேல்
ஏற்பது இகழேல்
ஐயம் இட்டு உண்
ஒப்புரவு ஒழுகு
ஓதுவது ஒழியேல்
ஔவியம் பேசேல்
அஃகம் சுருக்கேல்

Hasini Sentharan
செ. ஹாசினி
ஆண்டு 4
பாரதிதாசன்



ஔவையார்

## எனது பூந்தோட்டம்

அஜீஸ் ஆதவன்
4 - கண்ணதாசன்



எனது பூந்தோட்டம் மிகவும் அழகானது. பல வர்ணங்கள் நிறைந்த பூக்கள் எனது தோட்டத்தில் உள்ளது.



தமிழ் என் அடையாளம்

தமிழ் என்பேச்சு தமிழ் என்மூச்சு
தமிழ் என் உயிர்



எங்கள் வாழ்வும்
எங்கள் வளமும்
மங்காத தமிழென்று
சங்கே முழங்கு!
- பாவேந்தர்

திருவள்ளுவர்

கருண்யா நந்தகுமார்
ஆண்டு 4 கண்ணதாசன்

---

ஒழுக்கம் விழுப்பம் தரலான்; ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்.

அர்த்தம்: ஒழுக்கம் என்பது மனிதனின் மிகப் பெரிய அழகு.

ஒழுக்கம் இருந்தால் அனைவரிடமும் மரியாதையும் நம்பிக்கையும் கிடைக்கும். ஒழுக்கம் நம்மை நல்ல பழக்கங்களுக்கும் சரியான வழிக்கும் அழைத்துச் செல்லும்.

ஆகையால், உயிரைப் போல் ஒழுக்கத்தையும் காப்பது முக்கியம்.

லவீணா ஹமிலன்
அண்டு 4
சோமசுந்தர் புலவர்

---



JAILER

ஜெயிலர்

கருஷின் ஜதீஸ்வரன்
ஆண்டு 4
சோமசுந்தரப்புலவர்

---



## கம்பர்

சிறு வயதிலிருந்தே அவருக்குக் கவிதைகள் எழுதும் ஆர்வம் இருந்தது. அம்மொழிகளின் அடிப்படையை பாரம்பரிய முறையில் நன்கு கற்ற அவர், பல கவிதைகளும், நூல்களும் எழுதத் தொடங்கினார். அதன் பின்னர், அவரது கவிப்புலமை எட்டுத்திக்கும் பரவத் தொடங்கியது.

யஷ்வின்
ஆண்டு 5 கம்பர்

எமது பண்பாட்டையும் பண்டிகைகளையும் பேணி பாதுகாப்போம்.





கெஜஷா. ராம்ஜி
கம்பர் 5

## சுப்பிரமணிய பாரதியார்



சுப்பிரமணிய பாரதியார் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு கவிஞர், சுதந்திரப் போராட்ட வீரர் மற்றும் சமூக சீர்திருத்தவாதி ஆவார். அவர் இந்தியாவின் மிகச்சிறந்த கவிஞர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார்.

அண்டு-5
கபிலர்
ஆருஷன் நந்தகுமாரன்

## இலங்கையில் தமிழர் சிற்பக்கலை

தமிழர் சிற்பக்கலை இலங்கையில் தொன்று தொட்டு வளர்ந்து வந்த ஒரு கலை ஆகும். தமிழர் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலையில் சிறந்து விளங்கியுள்ளனர். இலங்கையில் உள்ள பல கோயில்கள் மற்றும் கட்டடங்களில் தமிழர் சிற்பக்கலையின் தாக்கம் காணப்படுகிறது. உதாரணமாக நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில் மற்றும் கதிர்காமம் முருகன் கோயில் போன்ற இடங்களில் தமிழர் சிற்பக்கலையின் தாக்கம் உள்ளது.

இலங்கையில் உள்ள பல புத்தர் சிலைகள் தமிழர் பாணியில் செதுக்கப்பட்டுள்ளன, இது இரு இனங்களிடையே நிலவிய கலைப் பரிமாற்றத்தைக் காட்டுகிறது. பிற்கால சோழர்கள் ஆட்சியில், தமிழர் சிற்பக்கலை மேலும் வளர்ச்சி பெற்றது. தமிழர் சிற்பக்கலை இலங்கை மக்களிடையே ஒரு கலாச்சார பாலமாக விளங்குகிறது, மேலும் இரு இனங்களிடையே கலை மற்றும் பண்பாட்டுப் பரிமாற்றத்தை எடுத்துக்காட்டுகிறது.

ம. மஹான்யா
ஆண்டு 5 கம்பர்

## அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்றார் ஔவையார். அவர்கள் நம் இரு கண்கள் போன்றவர்கள். நாம் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க, உதவுபவர்கள். "தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை; தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை" எம் பெற்றோர் காட்டிய வழியில் நடந்து வாழ்க்கையில் வெற்றி பெறுவோம்.







## தமிழ் புலவர்கள்

பாரதியார், ஔவையார், திருவள்ளுவர், கம்பர் ஆகியோர் பெருமை மிக்க தமிழ் புலவர்கள்.

பாரதியார் தமிழ்மொழி வாழ்த்து, ஓடி விளையாடு பாப்பா பாடல்களை எழுதினார்.

ஔவையார் ஆத்தி சூடி, கொன்றைவேந்தன் எழுதினார், திருவள்ளுவர் திருக்குறள் எழுதினார். இதில் 1330 குறள்கள் உள்ளன.

கம்பர் இராமாயணத்தை தமிழில் எழுதினார், கம்பரை கவிச்சக்கரவர்த்தி என்று குறிப்பிடுவது வழக்கம்.

அறம் செய விரும்பு ஆறுவது சினம் - ஆத்தி சூடி

ஓவியா ஆண்டு 5 கபிலர்



## தைப்பொங்கல்

தைப்பொங்கல் தை மாதத்தில் கொண்டாடப்படும் இது உழவர் திருநாள் ஆகும். தைப் பொங்கல் சூரியனிற்கு நன்றி செலுத்தும் நாள். பொங்கலை உறவினர்களோடும் நண்பர்களோடும் பகிர்ந்து உண்போம்.

"பொங்கலோ பொங்கல்"





அர்ஜுன் துவாரகன்
ஆண்டு 5 கபிலர்.


தரண்யா, ஆண்டு 5 கபிலர்
தஞ்சாவூர்
தஞ்சாவூர் தமிழ் நாட்டு ஒரு பாரம்பரிய இடங்களில் ஒன்றாகும்.
தஞ்சாவூரில் பல ஆலயங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று
தஞ்சை பெருங் கோவில். இந்த
கோவிலை ராஜ ராஜ சோழன்
11ம் நூற்றாண்டில் கட்டினார். கோவில்
சுவற்றில் பல தமிழ் சித்திரங்கள்
செதுக்கப்பத்துள்ளது.
சிவ சிவ
தஞ்சை பெரும் கோவில்


~சிவபெருமான்~
தரணிவேந்தன்
பாலகுமார்


தைப்பொங்கல் விழாவை நாம் சூரியனுக்கு நன்றி
செலுத்தும் விழாவாகக் கொண்டாடுகிறோம்.
சந்தோஷ் பாலரூபன் ஆண்டு 6 புகழேந்தி


"கனவு
மெய்ப்பட
வேண்டும்"
அரகன் அரவிந்தன்
ஆண்டு-6
புகழேந்தி

## தொழில்நுட்ப வளர்ச்சி










மோகிதா செல்வராசா
ஆண்டு 6 புகழேந்தி

---

## திருக்குறள்

"அகர முதல எழுத்தெல்லாம், ஆதி பகவன் முதற்றே உலகு."

இந்த குறள் தான் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளில் முதலாவதாக வரும் குறள். திருவள்ளுவர் இந்தியாவின் தமிழ் நாட்டில் பிறந்தார். அவர் ஒரு பிரபலமான தமிழ் தத்துவஞானி. திருக்குறளில் 1330 குறள்கள் உண்டு. 3 பிரிவுகள் உண்டு: அறத்துப்பால், பொருட்பால், மற்றும் காமத்துப்பால். இராமாயணம் மற்றும் மகாபாரதம் போல் அன்றி, திருக்குறள் உலகத்தில் எல்லா மக்களும் படிக்கலாம். இந்த நூல் நூற்றுக்கு மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. திருக்குறள் எங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டும்.

-அபிரஜா. கிரிதரன், ஆண்டு 6, வள்ளுவர்

---

卐 உ

## திருவள்ளுவர்

திருவள்ளுவர் பழந்தமிழ் இலக்கியமான திருக்குறளை இயற்றிய தமிழ்ப் புலவர் ஆவார். இவர் பிறந்த இடம் இந்தியா ஆகும். திருவள்ளுவர் பல சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுவர். நாயனார், வள்ளுவர், செந்நாப்புலவர், தேவர் என பல உண்டு. திருக்குறளில் மொத்தம் 1330 குறள்கள் உள்ளன. இவை 133 அதிகாரங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. சென்னையில் வள்ளுவர் நினைவாக வள்ளுவர் கோட்டம் நினைவிடம் ஒன்று அமைக்கப்பட்டது.




அனன்யா அரவிந்தன்
ஆண்டு 6 வள்ளுவர்

---

## தமிழர் திருநாள்–பொங்கல்



விதீஷ் செல்வகுமார்
வள்ளுவர்

## உலக நீதி

1. ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்
2. ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.
3. மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்
4. நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்
5. மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்
6. தருமத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்
7. கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டாம்
8. மூத்தோர் சொல் வார்த்தைதனை மறக்க வேண்டாம்
9. புண்படவே வார்த்தைதனைச் சொல்ல வேண்டாம்
10. செய்ந்நன்றி ஒருநாளும் மறக்க வேண்டாம்.

ஜஷ்வினா
ஆண்டு - 6



## பாரதியார்

பாரதியார் ஒரு தமிழ் புலவர். இவர் பல பாப்பா பாடல்கள் பாடியுள்ளார். அத்துடன் பாஞ்சாலி சபதம், வந்தேமாதரம், குயில் பாட்டு போன்றவையும் குறிப்பிடத்தக்கது.

அஞ்சனா லவன்.
7-1 விபுலானந்தர்

## தொலைபேசி பாடசாலையில் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மை தீமை

உலகில் மனிதன் பிறரிடம் தொடர்புகொள்ள பல சாதனங்களை பயன்படுத்தி வருகின்றான். அவற்றில் முதலிடத்தை பிடித்து இருப்பது கைதொலைபேசி எனலாம். தற்போது கைதொலைபேசியின் பயன்பாடு அதிகமாக உள்ளது. பாடசாலை மாணவர்கள் கூட கைதொலைபேசியினைப் பயன்படுத்துகின்றனர்.

மாணவர்கள் வகுப்பறையில் பாடங்களை ஒலிப்பதிவு செய்யும், புகைப்படம் எடுக்கவும் கைதொலைபேசியினை பயன்படுத்தலாம். அவற்றை வீட்டில் மீட்டல் செய்வதற்கு உதவுகின்றது.

மேலும், பாடம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு கைதொலைபேசி பயன்படுத்தலாம். அத்தொடு இணைய வகுப்புகளையும் கைதொலைபேசி பயன்படுத்தலாம்.
அவசரதேவைகளின் போது பெற்றோரிடம் தொடர்புகொள்வதற்கு உதவுகின்றது.

கைதொலைபேசியினைப் வகுப்பறையில் வைத்திருப்பதால் மாணவர்களுக்கு கவனசிதறல் ஏற்பட வாய்ப்புள்ளது. பாடங்களை கவனிக்காமல் கைதொலைபேசியினில் விளையாடுவதற்கு வாய்ப்பு உள்ளது.
இன்றைய மாணவர்கள் தங்களின் பொன்னான நேரத்தை உரையாடியும் குறுஞ்செய்திகள் அனுப்பியும் வீணாக்குகிறார்கள்,
என்னவே மாணவர்கள் தேவைக்குப் மற்றும் பயன்படுத்து நல்லது.

மா. மாதேஷ்
ஆண்டு 7 கனியன் பூங்குன்றனார்




"பெரிதினும்
பெரிது
கேள்"

அதன்யன் பிரவீந்தன்
ஆண்டு-7
கனியன் பூங்குன்றனார்


கிருஷ்ணர்
by
அஷ்வித்
நாவலர்


திருவள்ளுவர்
கிஷாரன்
கோவிந்தராஜ்
நாவலர்


விநாயகர்
செல்வத்திற்கும்
ஞானத்திற்
கும் அதிபதி
by:
அக்ஷினி
நாவலர்


ஆரோகன்
ஆண்டு-5
கம்பர்.
தமிழ் என்
தாய் மொழி.


Spoorthy ஸ்பூர்த்தி
ARJUNA
ஆண்டு 2 தாமரை


காவியசிறி செந்தூரன்
ஆண்டு-4
கண்ணதாசன்
Ice Cream
குளிர் களி


என் அம்மா
என் அம்மா அழகானவர்.
அவர் மிகவும் அன்பானவர்.
எனக்கு உணவு தந்திடுவார்.
எனக்கு உடை வழங்கிடுவார்.
நான் விரும்பியதைச் செய்திடுவார்.
அம்மாவை எனக்கு மிகவும் பிடிக்கும்.
என் அம்மா சுவையாக சமைப்பவர்.
என் அம்மாவுக்கு 5 சகோதரங்கள் உள்ளனர்.
என் அம்மாவுக்கு என்னை மிகவும் பிடிக்கும்
என் அம்மா படம்
பெயர் - அக்ஷரா
வகுப்பு - கபிலர்


"மனதில் உறுதி வேண்டும்"
அர்ச்சனா அரவிந்தன்
கணியன் பூங்குன்றனார் ஆண்டு 7

## எனது கைத்தொலைபேசி பேசுகிறது

நான் கடந்த வருடம் ஒரு அழகிய கைத்தொலைபேசியாக உருவெடுத்தேன். நான் உருவாகிய நாடு அமெரிக்கா. அங்கிருந்து வேறு பல நாடுகளுக்கு பயணம் செய்து அவுஸ்திரேலியா வந்தடைந்தேன்.

ஒரு நாள் சில பிள்ளைகள் பாடசாலை முடிந்து நான் தங்கியிருந்த கடைக்கு வந்து என்னை பணம் கொடுத்து வாங்கினார்கள்.

எனது புதிய உரிமையாளர் விஜய். விஜய் என்னை ஒரு பளிங்கு போல் பார்ப்பான். எனத மறந்தாலும் அவனால் என்னை மறக்க முடியவில்லை.

என்னோடு அவன் இருக்கும் ஒவ்வொரு கணமும் அவனுக்கு வீட்டில் வசை மொழிதான். நானும் சில நேரம் நினைப்பதுண்டு, நான் இல்லாவிடில் விஜய் படிப்பில் கூடுதல் கவனம் செலுத்துவான் என்று.

எனினும் நான் ஒரு மகிழ்ச்சியான கைத்தொலைபேசி.

வினுஷன் ஜதீஸ்வரன்
ஆண்டு 10 பரிமேலழகர்

## தமிழ் எங்கள் அடையாளம்

மாறிவரும் உலகசூழலில் மக்கள் தமது தேவைகளுக்காகவும் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும், யுத்த சூழ்நிலைகளாலும் தமது பாரம்பரிய நிலங்களைவிட்டு இடம்பெயர்ந்து உலகின் பல பகுதிகளில் வாழ்கின்றனர். தமிழர்களாகிய நாம் தமிழ்நாட்டையும் ஈழத்தையும் எமது பூர்வீகமாகக்கொண்டிருந்தாலும் இன்று உலகின் பல பகுதிகளில் குறிப்பாக மலேசியா, சிங்கப்பூர், மியன்மார், அவுஸ்ரேலியா, இங்கிலாந்து, கனடா போன்ற நாடுகளில் பரந்து வாழ்கின்றோம்.

இவ்வாறு பல நாடுகளில் வாழ்ந்தாலும் எமது மொழி, இலக்கியம், கலை, இசை, நடனம் என்பவற்றை அழிந்துவிடாமல் காப்பது எமது கடமையாகும்.

"விண்ணோடும் உடுக்களோடும் மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம் நாங்கள்"

என்று கூறுகிறார் பாரதிதாசன். இதிலிருந்தே எமது தொன்மையையும் எமது மொழியின் வயதையும் அறிந்து கொள்ளலாம். எனவே இனத்தால் எம்மை அடையாளம் காண்பதற்கும் நம் முன்னோர் தந்திருக்கும் கலாச்சார பண்புகளை பேணிக்காப்பதற்கும் நாம் அனைவரும் எம்மால் முடிந்த எல்லாவற்றையும் செய்வோம்.

அகிட்ஷா. ராம்ஜி
7, வீரமாமுனிவர்




ஸ்ரீநிகா சாயிரூபன்
ஆண்டு 7
கனியன் பூங்குன்றனார்

## தைப்பொங்கல்

– ஆதிசக்தி திருஅரங்கன்
(ஆண்டு 7, வீரமாமுனிவர்)

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்" என்று உழவுத் தொழிலின் சிறப்பைத் திருவள்ளுவர் போற்றிப் பாடியுள்ளார். அத்தகைய உழவுத் தொழிலைச் செய்கின்ற உழவர்கள் வேளாண்மையால் பெற்ற விளைச்சலை அறுவடை செய்து பயன் அடையும் மாதம் தை மாதம் ஆகும். அந்த நாளைத் தமிழர்கள் காலங்காலமாகத் தைப்பொங்கல் பண்டிகை என்று கொண்டாடி வந்துள்ளார்கள். அந்த அறுவடையில் கிடைத்த நெல்லின் புத்தரிசியைச் சருக்கரை, பால், நெய் சேர்த்துப் புதுப்பானையிலிட்டுப் புதிய அடுப்பிலே வைத்துப் பொங்கல் செய்வார்கள். அப்பொங்கலை உயிர்களுக்கு வாழ்வளிக்கும் சூரியனுக்கும், தம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும் தமது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் முகமாகப் படைத்துக் கொண்டாடுவார்கள்.

இந்த விழாவைத் தமிழர்கள் மலகிதமாகக் கொண்டாடுவார்கள், தைமாதம் முதல் நாள் தைப்பொங்கல் என்று கொண்டாடுவார்கள். இதற்கு முதல் நாளன்று வீட்டிலே இருக்கின்ற தேவையற்ற பொருள்களைத் தீயிலிட்டுக் கொழுத்துவர். இது போகிப் பண்டிகை என்று பழையன கழித்தல் என்பதாகக் கொண்டாடப்படும் விழாவாகும். தைப்பொங்கலுக்கு அடுத்த நாள் மாட்டுப் பொங்கல் நடைபெறும். இது உதவி செய்கின்ற கால்நடைகளுக்குப் பொங்கல் செய்து உணவளிக்கும் நாளாகிறது. தைப்பொங்கலுக்கு அடுத்து வரும் மூன்றாம் நாளன்று காணும் பொங்கல் என்று கொண்டாடுவார்கள். காணும் பொங்கலைக் கன்னிப் பொங்கல் அல்லது காணும் பண்டிகை என்றும் அழைப்பர். இப்பண்டிகையின் பொழுது உற்றார், உறவினர் நண்பர்களை அழைத்து விருந்தோம்பி உறவாடுவதும், பெரியோர்களின் நல்ல ஆசி பெறுவதும் வழக்கம். சில இடங்களில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், பட்டிமன்றம் முதலியனவும் நடத்துவது வழக்கம். இந்த விழா தென்னிந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், ஐரோப்பிய நாடுகள், வட அமெரிக்கா, தென் ஆப்பிரிக்கா, மொரிசியசு எனத் தமிழர் வாழும் அனைத்து நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது.

# ஆறுவது சினம்

அன்புள்ள ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் அனைவருக்கும் எனது அன்பார்ந்த வணக்கம். அத்துடன் எனது உரையை வாசிக்க நேரத்தை ஒதுக்கி தந்தமைக்கும் நன்றி.

ஔவையார் எமக்கு ஆத்திசூடி மூலம் பல முக்கியமான ஒழுக்கங்களைக் கற்றுக் கொடுத்துள்ளார். அதில் ஒன்று "ஆறுவது சினம்."

அதாவது கோபம் வந்தால் நாம் அதை ஆற விட வேண்டும். அதிகம் சினம் கொள்பவர்கள் அதிக மன உளைச்சலுக்கு உள்ளாகின்றனர். உயர் இரத்த அழுத்தம் போன்றவையும் ஏற்படுகிறது.

அதீத சினத்திற்கு உட்படும் மனிதர்கள் எப்போதும் விடயங்களை சரிவர விளங்கிக் கொள்ள முடியாமல் சினம் அவர்களின் மூளையை மழுங்கடித்திருக்கும். இதனால் அவர்கள் பேசுகின்ற வார்த்தைகளும், செய்கின்ற செயல்களும் பல நேரங்களில் தவறான விளைவுகளை ஏற்படுத்துகிறது. எனவே இந்த இரு வார்த்தைகளும் நம் வாழ்க்கையில் முக்கியமான விடயமாகும். கோபம் வருவது மனித இயல்பு. ஆனால் அதைக் கட்டுப்படுத்தும் திறமையை நாம் தான் வளர்த்துக் கொள்ள வேண்டும். அதுவே மனிதனாகிய நமக்கு பெருமை.

ஆறுவது சினம் என்று ஔவையார் சொல்லும் போது தெளிவாக இருந்து தமிழ் மொழியை மட்டும் பின்பற்றாது அமைதி, கண்ணியம், பொறுமை என்பவற்றையும் நாம் பின்பற்ற வேண்டும் என்பதையும் அவர் நமக்குக் கற்பிக்கின்றார்.

இன்றைய காலத்தில் சாதாரணமாகவே வீடுகளிலும், சமூகத்திலும் நடைபெறும் விடயங்கள் மூலம் நமக்கு எளிதாக கோபம் வருவது இயல்பாகி விட்டது. சமூக ஊடகங்கள், போட்டிகள், தவறான புரிதல்கள் போன்றவை கோபத்தை விரைவாகத் தூண்டுகின்றன. கோபம் நம்மை வலிமையானவர்களாக மாற்றாது. மாறாக பலவீனமானவர்களாக்கும். எனவே அடுத்த முறை கோபம் வரும் போது கோபத்தை முறைப்படுத்தும் முயற்சிகளை எடுங்கள். அது நம்மை பலமாக்கும். மன அமைதியுடன் அதுவே அழகாகும்.

நன்றி

ஆண்டு 11 - தொல்காப்பியர்
அரன் நந்தகுமாரன்

# தமிழ் என் அடையாளம்

அடையாளம் என்பது ஒரு மனிதனை அல்லது குழுவை வரையறுக்கும் குணங்களின் தொகுப்பாகும். ஒருவரின் அடையாளத்தை மொழி, இனம், பழக்கவழக்கங்கள், கலாசாரம், மரபுகள், உடைகள், உணவு மற்றும் பலவிதமான காரணிகள் மூலமாக் காணலாம். எனது அடையாளம் தமிழ், ஆனால் புலம்பெயர்ந்து வாழும் போது எனது அடையாளத்தை வெளிப்படுத்துவது கடினமாக இருக்கும்

எமது அடையாளத்தை வெளிப்படுத்தும் போது அதிக சவால்கள் உள்ளன. உதாரணமாக அவுஸ்திரேலியா ஒரு பல்கலாசார நாடாக இருந்தாலும், இன்னும் மேலாதிக்க மேற்கத்திய கலாசாரம் உள்ளது. மக்கள் தங்கள் சொந்த கலாசாரத்திற்கு பதிலாக மேற்கத்தேய கலாசாரத்தை பின்பற்ற நினைப்பார்கள். மேலும் உங்கள் அடையாளத்தினை கண்டறிவது கடினமாக இருக்கலாம். ஆனால் உங்கள் அடையாளத்தை வெளிப்படுத்த இன்னும் சில வழிகள் இருக்கின்றன.

உங்கள் அடையாளத்தை காட்டும்போது உங்கள் தாய்மொழியை கற்றுக்கொள்வது முக்கியம், எனவே அதை உங்கள் குடும்பத்தில் பேசுவது அதை வெளிப்படுத்த ஒரு வழியாகும். உங்கள் கலாசார உணவு உண்ணுதல் மற்றும் கலாசார ஆடைகளை அணிவது உங்கள் அடையாளத்தை வெளிப்படுத்தும் மற்ற வழிகள். தமிழ் விழாக்கள் மற்றும் பாரம்பரிய செயல்களை செய்தாலும் எங்கள் அடையாளத்தை வெளி உலகத்திற்கு காட்டலாம். உதாரணமாக விருந்தோம்பல், பெற்றோரை மதித்தல் மற்றும் தைப்பொங்கல், தமிழ் புத்தாண்டு போன்ற தமிழ் பண்டிகைகளை கொண்டாடுவது எங்கள் அடையாளத்தை சிறப்பாக வெளிக்காட்டலாம்.

என் வாழ்க்கையில் எனது அடையாளத்தை பாதுகாக்க முயற்சி செய்வேன். எனது குடும்பத்துடன், தமிழ் சரளமாக பேசுகிறேன், தமிழ் நிகழ்வுகளிற்கு, தமிழ் உணவு சாப்பிடுகிறேன். என் வாழ்க்கையில் இந்த சிறிய விடயங்கள் என் அடையாளத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. பாரதிதாசன் கூறினார்

"தமிழுக்கும் அமுதென்று பேர், அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள்
உயிருக்கு நேர்"

இதன் பொருள் தமிழ் மிகவும் இனிமையானது, அது உங்கள் வாழ்க்கை முழுவதும் இருக்க வேண்டும். இது தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது. நீங்கள் அடையாளத்தை வெளிப்படுத்த செய்யும் செயல்கள் சிறியதாக தோன்றினாலும் உங்கள் அடையாளத்தை வெளிப்படுத்துவது எதிர்கால சந்ததியினருக்கு அடையாளத்தை பாதுகாக்க பெரிய உதவியாக இருக்கும். அவர்களுக்கு தமிழ் அடையாளத்தை தக்கவைக்க சுலபமாக இருக்கும்

நன்றி
வணக்கம்

மாதுமை ஜெகன்
ஆண்டு 12 அகத்தியர்

## எனது தமிழ்ப் பாடசாலை அனுபவம்

நான் தமிழ்ப் பாடசாலைக்கு ஆரம்பப்பள்ளி முதல் செல்கிறேன். இப்போது ஆண்டு 8இல் கற்கிறேன். தமிழ்ப் பாடசாலையில் எனக்கு மிகவும் பிடித்த விடயம் எனது நண்பர்கள். அதை விட எனக்கு பாடசாலை கலைவிழாவும் மிகவும் விருப்பம். கலைவிழாவின் போது நாங்கள் மேடை ஏறி நாடகம், நடனம், கூத்து, நாட்டுப் புற கலைகள் என நிறைய செய்வோம். என்னால் இப்போது தமிழ் நன்றாக வாசிக்க முடியும். எழுதவும் முடியும். தமிழை நன்றாக விளங்க முடியும். எனது தமிழ் மொழி வளர்ச்சியை நினைக்க எனக்கு பெருமையாக உள்ளது. மேன்மேலும் தமிழ்ப் பாடசாலையின் சேவை வளர வேண்டுமென வாழ்த்துகிறேன்.

ஸ்ரீவர்ஷன் ஜெகதீஸ்வரன்
ஆண்டு 8 இளங்கோ

## சிலப்பதிகாரம்

தமிழ் மொழியில் ஐந்து பெருங்காப்பியங்களும், ஐந்து சிறு காப்பியங்களும் உள்ளன. இவை தவிர வேறு சில காப்பியங்களும் உள்ளன. ஐம்பெரும் காப்பியங்களுள் முதல் பெருங்காப்பியமாக போற்றப்படுவது சிலப்பதிகாரம் ஆகும்.

ஒருவர் வாழ்க்கையை முழுமையாகப் பார்த்து, உயர்ந்த உண்மைகளைக் காட்டி, மனித சமுதாயத்தை வழி நடத்திச் செல்லும் முதல் இலக்கிய முயற்சியாக, மற்றும் பெருங்காப்பியமாக அமைந்தது சிலப்பதிகாரம் ஆகும்.

சிலம்பு காரணமாக விளைந்த கதை ஆதலால் சிலப்பதிகாரம் எனப் பெயர் பெற்றது. சிலப்பதிகாரம் சிலம்பு + அதிகாரம் என்ற இரு சொற்களால் ஆனது. காப்பிய இலக்கணப்படி பெருங்காப்பியம் தன்னிகரில்லாத தலைவனைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆனால் சிலம்பில் கண்ணகி தன்னிகரில்லாத தலைவியாகப் போற்றப்படுகின்றாள் என்பது காப்பியத்திற்குரிய சிறப்பம்சமாக உள்ளது. சிலப்பதிகாரத்திற்கு பல பெயர்கள் உண்டு, அவற்றில் சில பத்தினிக்காப்பியம், தமிழின் முதல் காப்பியம், புரட்சிக்காப்பியம் ஆகும்.

தமிழில் தோன்றிய இரட்டைக் காப்பியங்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகும். இரட்டை காப்பியத்தில் சிலப்பதிகாரமும் ஒன்றாகும். சிலப்பதிகாரம் 3 காண்டங்களை உடையது. அவை புகார்காண்டம், மதுரை காண்டம், வஞ்சிக் காண்டம் என்பனவாகும். சிலப்பதிகாரத்தை பாரதியார் "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று சிறப்பித்து கூறியுள்ளார்.

தமிழறிஞர்களினால் இதுவரை பல நூல்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு உள்ளன. எனினும் அதிக அளவில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட நூல் என்ற சிறப்பை சிலப்பதிகாரம்.

அசோகன் திருச்செல்வகுமார்
ஆண்டு 10 பரிமேலழகர்

# தமிழ்ப் பாடசாலையில் எனது பயணம்

– திருமதி நிர்மலா இராசலிங்கம்
ஆசிரியர்



இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியாவிற்கு 1994 ஆம் ஆண்டு புலம்பெயர்ந்த நான் வென்றவேத்வில் தமிழ்க் கல்வி நிலையத்தில் ஓர் ஆசிரியராக எனது பணியை ஆரம்பித்தேன்.

அப்போது பாடசாலையில் ஆசிரியர்கள் பற்றாக்குறை இருந்தமையால், எனது சித்தப்பா, சிறி பவானந்தராசா என்னைத் தமிழ்மொழி கற்பிப்பதற்குப் பாடசாலைக்கு அழைத்துச் சென்றார். அப்பொழுது மாணவர்கள், ஆசிரியர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தது. மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தமை யால் கற்பித்தல் செயற்பாடு ஆசிரியர்களுக்கு மிக இலகுவாக அமைந்திருந்தது.

ஆரம்ப காலத்தில் நிர்வாகத்தினர், பெற்றோர்கள், ஆசிரியர்கள், ஆர்வலர்கள் போன்றவர்களின் நிதி உதவியினால் மாணவர்களுக்கு இடைவேளையின்போது குளிர்பானம், பிஸ்கட் போன்றவை வழங்கப்பட்டன. அரச மானியம் எமது பாடசாலைக்குக் கிடைக்கத் தொடங்கியதிலிருந்து, அதைக்கொண்டு பாடசாலை இடைவேளையின்போது மாணவர்களுக்கான பிஸ்கெட், குளிர்பானங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அக் காலகட்டத்திலே மாணவர்களுக்குத் தேவையான அச்சுப் பிரதி (Photocopy) எடுப்பதற்குரிய அச்சுப்பிரதி இயந்திரம் வாங்குவதற்குரிய நிதி பாடசாலையிடம் இருக்கவில்லை. அதனால் ஆசிரியர்கள், பெற்றோர்கள் தாங்களாகவே முன்வந்து மாணவர்களுக்கான அச்சுப் பிரதிகளைப் பாடசாலைக்கு வெளியே பணம் செலுத்தி எடுத்து வந்தனர். எமது தமிழ் பாடசாலைக்கு அரச மானியம் கிடைத்ததன் பின்பு பாடசாலைக்கென அச்சுப்பிரதி இயந்திரத்தை (Photo copy machine) வாங்க முடிந்தமையால், மாணவர்களுக்கான பிரதிகளை எடுப்பது நிர்வாகத்தினருக்கு மிகவும் இலகுவாக இருந்தது.

அக்கால கட்டத்தில் சிங்கப்பூரில் இருந்து பெறப்பட்ட பாடப் புத்தகங்கள், பயிற்சி நூல்களையே ஆசிரியர்கள் கற்பித்தலுக்கு பயன்படுத்தினார்கள். பின்பு இம்முறையானது படிப்படியாக மாற்றப்பட்டு தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பை (Federation of Tamil Schools) ஆரம்பித்து அதனூடாக ஆரம்ப வகுப்புத் தொடக்கம் ஆண்டு எட்டு வரையிலான வகுப்புகளுக்குரிய பாடப் புத்தகங்களைத் தாங்களாகவே எழுதி, அச்சடிப்பித்து மாணவர்களுக்கு இலவசமாக வழங்கி வந்தனர். இப் புத்தகங்களையே தேவைப்படும்போது திருத்திய பதிப்புகள் பதிப்பித்து தற்போதுவரை பாவித்து வருகின்றோம்.

ஒவ்வொரு வருடமும் தமிழ்க் கூட்டமைப்பு (NSWFTS) பாடசாலைகள் ஒன்று சேர்ந்து, நிர்வாகத்தினால் விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டு வந்தன. தவிர்க்க முடியாத சில காரணங்களால் இவ் விளையாட்டுப் போட்டிகள் சில வருடங்களின் பின்பு நிறுத்தப்பட்டுவிட்டன. எனினும் தமிழ்க் கலைவிழா ஒவ்வொரு வருடமும் இன்றுவரையில் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அக்காலகட்டத்தில் பெற்றோரின் பங்களிப்பு மிகக் குறைவாகவே இருந்தது. பின்பு பாடசாலை படிப்படியாக வளர்ச்சியடைந்து, மாணவர்கள் ஆசிரியர்கள் ஒன்றுகூடலும், மாணவர்களின் வகுப்பு ரீதியான நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

மாணவர்களது எண்ணிக்கை 2002, 2003 ஆம் ஆண்டளவில் மிக வேகமாக அதிகரித்தமையால், அதே பாடசாலையில் 2004 ஆம் ஆண்டு சனிக்கிழமை பாடசாலை இரண்டு நேரமாக நடாத்தப்பட்டது. இரு நேரப் பாடசாலையானது மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் பல சிக்கல்களை ஏற்படுத்தின. இக் காரணங்களினால் 2005 ஆம் ஆண்டு டார்சி வளாகம், கிரவீன் வளாகம் என இரு இடங்களிலும் ஒரே நேரத்தில் பாடசாலை நடாத்தப்பட்டது. புகையிரதப் பாதையை எல்லையாக வைத்து மாணவர்கள் பிரிக்கப்பட்டு டார்சி, கிரவீன் பாடசாலை வளாகங்களுக்கு அனுமதிக்கப்பட்டனர். ஆனால் கலை நிகழ்ச்சி, பரிசளிப்பு விழாக்கள் இரண்டு பாடசாலைகளையும் ஒன்று சேர்த்து ஒரே இடத்தில் நடைபெற்றது. 1996 ஆம் ஆண்டு ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் கட்டாயமாக Community Language Course செய்ய வேண்டும் என்று நிர்வாகம், ஆசிரியர்களை ஊக்குவித்ததில் இருந்து பின்னர் ஆசிரியர்கள் Community Language Courseஇனை செய்து வருகிறார்கள்.

எமது தமிழ் பாடசாலை தொடங்கிய ஆரம்ப காலகட்டங்களில் ஆசிரியர்களுக்கென்று பாடவிதானம், பாடத்திட்டம் என்ற ஒன்றும் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. பின்பு பாடசாலை படிப்படியாக வளர்ச்சியடைய நிர்வாகக்குழுவினரின் வேண்டுதலுக்கிணங்க வகுப்பகளுக்குரிய பாடவிதானம், பாடத்திட்டம் K-10 syllabus ஐ அடிப்படையாகக்கொண்டு ஆசிரியர்களினால் எழுதப்பட்டது. இது கற்பித்தலைச் சிறப்பாக நடைமுறைப் படுத்துவதற்கு வழிவகுத்தது எனலாம்.

2009 ஆம் ஆண்டு டார்சி பாடசாலையில் இணைப்பு வகுப்பு ஆரம்பித்து, Selective பரீட்சையில் தோன்றும் மாணவர்களின் நன்மை கருதி, தமிழை ஒரு பாடமாக எடுத்து இலகுவாகக் கற்றலைத் தொடர்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. அவ்வாறு கிரவீன் வளாகத்திலும் புகுநிலை வகுப்பில் புதிதாக வரும் சில மாணவர்களின் தேவைக்கேற்ப வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறு மாணவர்களின் தமிழ்மொழிக் கற்றலைப் பல வழிகளிலும் எமது பாடசாலை நிர்வாகம் சிறப்பாக ஊக்குவித்து வருகின்றது.

பாடசாலையின் மாணவர்களின் எண்ணிக்கை மென்மேலும் வேகமாக அதிகரிக்க, ஆசிரியர்களின் எண்ணிக்கை கூடியளவு தேவைப்பட்டதால், நேர்முகப் பரீட்சை வைத்து ஆசிரியர்கள் நிர்வாகத்தினால் தெரிவு செய்யப்பட்டனர். இது எல்லோராலும் மிகவும் வரவேற்கப்பட்டது. இன்று பாடசாலையில் HSC கற்று முடித்த இளம் மாணவர்களை ஆசிரியர்களாக நியமித்து, கற்பித்தற் செயற்பாட்டை நடாத்துவது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். எனது சக ஆசிரியரும், HSC க்கு தமிழை ஒரு பாடமாக எடுத்து சிறந்த பெறுபேறுகளை பெற்றவரே. அவர் இன்றும் என்னுடன் கடமையாற்றுவது மிகவும் பெருமைப்படும் ஒரு விடயமாகும்.

ஒவ்வொரு வருடமும் ஆசிரியர்களுக்குப் பயிற்சிப் பட்டறை நடத்துவதில் பாடசாலை நிர்வாகம் சிறப்பாகச் செயல் பட்டு வருவது விருப்பத்துக்குரிய செயற்பாடாகும். அத்தோடு பயிற்சிப் பட்டறைக்குச் செல்லும் ஆசிரியர்களுக்கான கட்டணம் செலுத்தல், போக்குவரத்து ஏற்பாடு, சிற்றுண்டி மற்றும் மதிய உணவு போன்றவற்றையும் இலவசம ாக வழங்கல் போன்ற பாராட்டத்தக்க செயற்பாடுகளையும் மேற்கொள்கின்றனர். இது எல்லா ஆசிரியர்களாலும் பாராட்டப்பட்டது. மற்றும் ஆசிரியர்களை மேலும் ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு தவணையும், இரண்டு பாடசாலைகளில் இருந்தும் இரு ஆசிரியர்களைத் தெரிவு செய்து கௌரவப்படுத்துவதுடன், பரிசளிப்பு விழாவிலும் ஆசிரியர்களின் நீண்டகாலச் சேவையைப் பாராட்டிக் கௌரவப்படுத்துவதுடன், ஒவ்வொரு ஆசிரியருக்கும் பொன் முடிப்புக் கொடுப்பதும் வரவேற்கத்தக்க ஒரு விடயமாகும். இவ்வருடம் கிரவீன் வளாகம் பென்டில்கில் பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது. இதனால் நிர்வாகம் பல சவால்களை எதிர்நோக்குவதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

இவ் வருடம் புகுநிலை ஆரம்பம், புகுநிலை உயர்வகுப்பு மாணவர்களின் கற்றலை ஊக்கப்படுத்தும் முகம ாக பள்ளிச் சாதனைப் பதிவு (Record of School Achievement - ROSA) முறையை தொடங்கியுள்ளது. 4 – 6 ம ற்றும் 7 – 9 வகுப்பு மாணவர்களுக்கு விசேட வகுப்புகளைத் தொடங்கி, அவர்களின் கற்றல் செயற்பாடுகள் ஊக்கப்படுத்தப்படுகின்றன. அத்துடன் கூழிறீஎீக்கு தமிழை ஒரு பாடமாக எடுக்காத மாணவர்களுக்குப் 10 ஆம் வகுப்புடன் பள்ளிச்சாதனைப் பதிவுச் சான்றிதழ்களை (யூநுறீப்) வழங்க முன்வந்தமை மாணவர்களை ஊக்கப்படுத்துவதாக அமைந்துள்ளது.

எமது செம் மொழியாம் தமிழ் மொழியையும், கலாசாரத்தையும் இளைய தலைமுறையினருக்கு எடுத்துச் செல் வதற்கு எமது தமிழ்ப் பாடசாலை முன்னின்று உழைப்பது மிகவும் பாராட்டக்கூடிய விடயமாகும். எனவே எமது தமிழ் இனத்தின் அடையாளத்தினை பாதுகாப்பதற்கு முன்னின்று எல்லோரும் உழைப்போமாக.

'வாழ்க தமிழ்மொழி வளர்க வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்'

# மூன்று தசாப்தங்களைத் தாண்டியும் தொடரும் வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையத்தின் சேவை



– திருமதி நிஷாந்தி யேசுராசா
ஆசிரியர்

தமிழ் வெறும் பேசும் மொழி மட்டுமல்ல. அது ஒரு பண்பாடு, ஒரு சிந்தனை, ஒரு வாழ்வியல். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற சங்கப் பாடல் கூறுவது போல, தமிழின் அடிப்படை மனிதநேயம் உலகத்தை ஒன்றிணைக்கும் விதத்தில் திகழ்கிறது. இன்று உலகின் பல்வேறு நாடுகளில் பரவி வாழும் தமிழர்கள், தமிழின் பெருமையை தங்கள் பிள்ளைகளுக்கும் அடுத்த தலைமுறைக்கும் எடுத்துச் செல்வதில் பல வழிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில் எமது வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம், அந்தப் பொறுப்பை சிறப்பாகச் சுமந்து, மொழியையும் பண்பாட்டையும் பேணிப் பாதுகாப்பதில் அளப்பரிய சேவை ஆற்றிவருகின்றது என்பது மிகவும் பெருமைக்குரிய விடயம்.

அவுஸ்திரேலியாவில் ஆரம்பகாலங்களில் குடியேறிய தமிழ் மக்கள், தங்கள் பிள்ளைகள் தமிழ் மொழியையும் பண்பாட்டையும் மறந்து விடக்கூடாது என்ற எண்ணத்தில் தமிழ்ப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் காலத்தோடு தேவைகளும், கற்றல் முறைகளின் முன்னேற்றமும் இணைந்து, இன்று தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய ஒழுங்குபடுத்தப்பட்ட தமிழ்ப் பாடசாலையாக எமது வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம் திகழ்கிறது.

கோவிட் பெருந்தொற்று காலப்பகுதியில், மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளில் எந்தவித இடையூறும் ஏற்படாத வகையில் நிர்வாகத்தினர் அயராது உழைத்து, ஆசிரியர்களுக்குப் பயிற்சிகளை வழங்கி, இணைய வழியாக கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அதுமட்டுமல்லாது, எமது பாடசாலை மாணவர் முகாமைத்துவத்திற்காக uEducateUs எனும் தொழில்நுட்பத் தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் ஆசிரியர்கள் மாணவர்களின் வருகைப் பதிவு, மதிப்பெண்கள், கற்றல் முன்னேற்றம், நடத்தை, நலன் தொடர்பான தகவல்கள் ஆகியவற்றை ஒரே தளத்தில் எளிதாகக் கண்காணிக்க முடிகிறது.

மூன்றாம் தலைமுறை குழந்தைகளுக்கு தமிழ் கற்பித்தல் சவாலான ஒன்றாக இருந்தாலும், ஆசிரியர்கள் பல்வேறு பாடத்திட்ட முறைகள், பாடல், விளையாட்டு, நாடகம், கதைகள் ஆகியவற்றின் மூலம் அவர்களின் ஆர்வத்தைத் தூண்டுகின்றனர்.

எமது பாடசாலையின் கீழ் நிலைப் பள்ளி ஆசிரியர்கள், சமீபத்தில் ஒலி அடிப்படையிலான கற்பித்தல் திட்டத்தை (Phonetic Sounds Program) அறிமுகப்படுத்தினர். இந்தத் திட்டத்தின் மூலம் மாணவர்கள் எழுத்துக்களை மட்டுமல்லாமல், அவற்றின் தனித்தனியான ஒலிகளையும் சரியாக அடையாளம் காண கற்றுக்கொண்டதை அவதானிக்க முடிந்தது. ஆசிரியர்களின் தொடர்ச்சியான வழிகாட்டுதலும், விளையாட்டுகள் மற்றும் செயற்பாடுகளோடு இணைந்த கற்றல் முறைகளும் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டுகின்றன. இதன் மூலம் அவர்களின் ஒலியுணர்வு திறன் வாழ்ந்து வருவதுடன், மாணவர்களுக்கு வாசிப்புப் பழக்கத்தை வளர்க்கவும், தமிழ் மொழியின் இனிமையை நெருக்கமாக உணரவும் பெரிதும் உதவுகின்றது.

வாரந்தோறும் ஒவ்வொரு சனிக்கிழமையும் எமது தமிழ்ப் பாடசாலைக்கு ஆர்வத்துடன் தமிழைக் கற்க வரும் மாணவர்களின் எண்ணிக்கை கடந்த வருடங்களில் கணிசமாக அதிகரித்துள்ளது. இது எமது பாடசாலையின் பணிகள் மற்றும் தூரநோக்குக் கொண்ட சேவைகளுக்குச் சிறந்த சான்றாக அமைகிறது.

இறுதியாக, எமது வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம், அவுஸ்திரேலியாவில் வளர்ந்து வரும் மூன்றாம் தலைமுறை தமிழ் மாணவர்களுக்கு, மொழியையும் பண்பாட்டையும் வாழவைக்கும் பாலமாகத் திகழ்கிறது. ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகக் குழுவினர் இணைந்து தொழில்நுட்ப வசதிகளையும் ஒருங்கிணைந்து, கல்வியை நவீன முறைகளில் முன்னேற்றி, காலத்தினதும், மாணவர்களினதும், சமூகத்தினதும் தேவைகளுக்கு ஏற்ப கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளைச் செவ்வனே செய்துவருகின்றனர். மூன்று தசாப்தங்களைத் தாண்டி, சிட்னி வாழ் இளைய தலைமுறைக்குத் தமிழ் மொழியையும், கலாசாரத்தையும் எடுத்துச்செல்லும் வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையத்தின் சேவையில் ஆசிரியர்களாகக் பங்குகொள்வதில் நாம் பெருமிதம் அடைகின்றோம்.

# தமிழும் செயற்கை நுண்ணறிவும்

– திரு அகலவன் ஸ்ரீஸ்கந்தராஜன்
ஆசிரியர்



தமிழின் கதை தெரியுமா? ஆதி மனித காலத்தில் சின்னங்களாகப் பிறப்பெடுத்து, பின் வாய்மொழியாக உருவெடுத்து, பிராமி, வட்டெழுத்து, கிரந்த எழுத்து என்று காலவெள்ளத்தில் பல வடிவங்களைக் கொண்டு, பின்னர் நாகரீகமயமாக்கலால் புதுப்பொலிவைப் பெற்று, தனக்கென ஓர் அழகிய இலக்கண அமைப்பைப் பெற்றாள். முத்தமிழைச் சுவைத்த இவள், புலவர்கள் வடம்பிடிக்கச் சங்ககாலத்தில் தங்கத்தேரில் பவனி வந்தாள். பனையோலையை விரும்பும் இவள், அகம், புறம், பக்தி, வானியல் என அனைத்துத் துறைகளிலும் கால்பதித்தாள். இவளின் சிறப்பைக் கண்டு வியந்த மன்னர்கள், இவளை அரியணையில் அமர்த்தி அழகுபார்த்ததோடு, இவளின் புகழைக் கல்வெட்டுகளில் செதுக்கினர். பின், தொழில்மயமாக்கல் அமைத்த புதிய பாதையில் அச்சு இயந்திரத்துக்குள் புகுந்து அழகிய தாள் வடிவைப் பெற்றாள். இப்பொழுது இணையத்தில் உலாவரும் இவளின் இத் தொடர்கதையின் அடுத்த அத்தியாயமே, செயற்கை நுண்ணறிவு.

மேம்பட்ட ஆக்கத்திறன், திறம்பட கற்றல், தர்க்கரீதியான முடிவெடுத்தல் போன்ற மனிதருக்கே உரிய பண்புகளை, தொழில்நுட்பத்தின் உதவியால், இயந்திரங்கள் பெற்றுச் செயல்படுவதே செயற்கை நுண்ணறிவாகும். அப்படிப்பட்ட புத்தாக்கத்தின் இப் புதிய வரவுக்குள், 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்ற பழமொழிக்கு ஏற்ப தன்னைச் சிரமமின்றி புகுத்திக் கொண்ட தமிழ், ஒரு விந்தைதான். குறிப்பாக சமூக ஊடகங்களில் இவர்களின் கூட்டணி பாராட்டத்தக்க ஒன்றாகும். படவரி, முகநூல், வலையொளி போன்றவற்றில் செயற்கை நுண்ணறிவைப் பலரும் பயன்படுத்தி, ஐம்பெரும் காப்பியங்கள், இதிகாசங்கள், நாவல்கள், சிறுகதைகள் என வெவ்வேறு தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்ற கதாபாத்திரங்களுக்குக் கச்சிதமான உருவம் கொடுத்து, யதார்த்தமான காட்சிகளை அமைத்து, ஆங்கிலம் மற்றும் தமிழில் குரல் கொடுத்து ஒரு திரைப்படத் தரத்திற்குக் காணொளிகளை உருவாக்குகிறார்கள். இதனூடாக, வரும் தலைமுறையினரைத் தமிழ் இலக்கியங்கள் நோக்கிக் கவர்ந்து, இத் தொன்மையான இலக்கிய மரபைப் பாதுகாக்கமுடியும். கூடுதலாக, படைப்பாற்றலை ஊக்குவிக்கும் இம்முயற்சியால் தமிழ் இலக்கியங்களுக்கு உலகளாவிய ரீதியில் அங்கீகாரம் கிடைக்கும்.

மற்றொருபுறம், தொல்லியல் துறை ஆர்வலர்கள் செயற்கை நுண்ணறிவை உபயோகித்து கீழடி, மாளிகைமேடு போன்ற தமிழரின் அகழ்வாராய்ச்சித் தளங்களில் கிடைக்கப்பெற்ற எஞ்சிய தொல்பொருள்களுக்கும், பழம்பெரும் ஆலயங்களில் சிதைந்து கிடக்கும் சிற்பங்களுக்கும், ஓவியங்களுக்கும் தர்க்க மற்றும் அனுமானரீதியில் மீளுருவம் கொடுக்கிறார்கள். அதுமட்டுமா, தமிழரின் புகழுக்குரிய கட்டிடக்கலையின் சிறப்புகளை வெளிக்கொணரும் வகையில் ஆலயங்களின் விரிவான வடிவமைப்பின் வரைபடத்தையும் வரைந்து தருகிறது இந்தச் செயற்கை நுண்ணறிவு. ஆக இதனூடாக, தமிழரின் வரலாற்றுச் சான்றுகளையும், இரகசியங்களையும், வெளிக்கொணர்ந்து, தமிழ்க் கல்வி மற்றும் ஆய்வு வளத்தை மேலும் மெருகூட்டலாம். கூடுதலாக, அதிநவீன இச் செயற்கை நுண்ணறிவின் உதவியால் கிடைக்கப்பெற்ற வரலாற்றுச் சான்றுகளை இணையத்தில் பகிர்வதன் மூலம், உலகத் தமிழர்களை அவர்களின் பூர்வீகத்தோடு உயிரோட்டமாக இணைக்க முடியும். இதனால், அவர்கள் தங்கள் அடையாளத்தில் பெருமை கொள்வர், ஆக அவர்களின் தமிழ் மொழி மற்றும் கலாசாரத்தின் மீதான பற்று வலுப்பெறும்.

மேற்கூறியவை மட்டுமன்றி இன்னும் பல வழியில் தமிழை வளர்க்க உதவுகிறது இச் செயற்கை நுண்ணறிவு. தமிழ்ப் பேச்சை உரையாக மாற்றும் செயலி, துல்லியமான மொழிபெயர்ப்பு சாதனங்கள், ஆய்வு செய்யப் பயன்படுத்தும் உசாத்துணைகளின் கருத்துச் சுருக்கத்தை உடனடியாக தரும் செயலி, புலப்பெயர் நாடுகளில் பல்கலாசார சூழலில் வாழும் இரண்டாம் தமிழ் தலைமுறையினர் தமிழைக் கற்க உருவாக்கப்பட்ட மொழிகற்கும் செயலிகள், தமிழ்ப் புத்தகங்களைத் தானே வாசித்துத்தரும் கருவி என பல்வேறு செயலிகளில் பயன்படுத்தப்படுகிறது இந்த செயற்கை நுண்ணறிவு.

ஆக வாருங்கள், கடாரம் வரை சென்று தமிழ்க்கொடியை நிலைநாட்டிய முடிகொண்ட சோழனின் எல்லையை, செயற்கை நுண்ணறிவைக் கொண்டு விரிவுபடுத்துவோம். மண் பாண்டங்கள், பனையோலைகள், செப்பேடுகள், கல்வெட்டுக்கள் என அந்தந்த காலகட்டத்தில் தன் அடையாளத்தை விட்டுச் சென்ற தமிழ் நிச்சயம் செயற்கை நுண்ணறிவிலும் தன் அடையாளத்தை ஆழமாக விட்டு, அடுத்த படிக்கும் செல்லும். எழுத்தாளர் தாமரை அவர்கள் கூறியது போல, மாற்றங்களை ஏற்றுக்கொண்டு பரிணாமமாகின்ற தமிழ், மூப்பில்லா மொழிதான். மூப்பில்லா தமிழே, நீ வளர்க!



திரு நகுலேஸ்வரராஜா
இராசையா

# நன்றி



திரு லவன்
சிவதாஸ்

தமிழையும் தமிழ் கலைகளையும் வளர்த்துக் கொண்டிருக்கும் வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம், தனது 37 ஆவது ஆண்டில் மீண்டும் ஒரு கலை விழாவை உங்கள் முன் கொண்டு வருவதில் பெருமிதம் அடைகிறது.

“உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்” – குறள் 394.

என்ற வள்ளுவர் குறளுக்கு அமைய எல்லோரும் மகிழும் வகையிலே கூடியிருந்து, ‘இனி என்று மீளக் கூடுவோம்’ என்று எண்ணும்படியாகப் பிரிதல் கற்றறிந்தோரின் செயல் ஆகும்.

கலை விழாவினை நடத்திக் கொண்டிருக்கும் நமது பாடசாலை மாணவர் செல்வங்களுக்கும், அவர்களோடு கூட நின்று ஒத்துழைக்கும் பெற்றோருக்கும் மற்றும் ஆசிரியர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

சமூக நிறுவனங்களில் தொண்டர்களின் பங்கு மிகவும் மகத்தானது, அவர்களின் நீண்ட நெடிய உழைப்பினால் தான் இக்கல்வி நிலையத்தினால் சிறப்பானது கலை விழாவினை உங்கள் முன் கொண்டு வர முடிந்துள்ளது. இதற்காக சேர்ந்து உழைத்த நிர்வாக குழு, கலாசார குழு மற்றும் ஏனைய உபகுழுக்கள் அனைவருக்கும் எமது ம னம் சார்ந்த நன்றிகள்.

பார்ப்பவர்களின் கண்களை மெருகூட்டுவதற்காக செயற்பட்ட ஒப்பனைக் கலைஞர்கள், ஒலி, ஒளி தொழில்நுட்ப வல்லுநர்கள், உணவுப் பண்டங்களை வழங்கிய உணவகங்கள், புகைப்படக் கலைஞர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

மேலும் இந்நிகழ்வினை ஒருங்கிணைத்து மலராக வெளிப்படுத்த அயராது பாடுபட்ட மலர்க் குழுவினருக்கும் அவர்களின் கருத்துக்களைச் செவ்வனே பதிப்பிட்ட அச்சக நிறுவனத்திற்கும் நமது நன்றிகள்.

